www.tamilarangam.net


# களத்தில்

(31.08.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (215)


அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.



தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தீவிரம் பெறும் சிங்களப் பயங்கரவாதம்

தமிழீழத்தின் அனைத்துப் பகுதியிலும் சிங்கள அரசபடையினரின் கொடுங்கரங்களின் பயங்கரவாத விதைப்புக்கள் தீவிரமாய் நடந்தேறுகின்றன. குண்டுவீச்சுக்கள், எறிகணைவீச்சுக்கள், துப்பாக்கிச்சூடுகளாக அது விரிந்து செல்கின்றது. கைதுகள், காணாமல்போதல்கள் கடந்த சில வாரங்களில் அதிகரித்துச் செல்கின்றன. சுற்றிவளைப்புக்களும் சோதனைகளும் அடிக்கடி நிகழும் காரியங்களாகிவிட்டன.



மிக்-27







சந்திரிகா அரசு பெருந்தொகைப் பணத்தைக் கொட்டி, அண்மையில் வாங்கிக் குவித்த ஆயுதங்களின் வலிமை தற்போது தமிழ்மக்கள்மீது பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது. சிறீலங்காவின் புதிய வான்பலமாகியுள்ள மிக்-27ரக போர்விமானங்கள், தமிழர்களின் வாழ்விடங்கள் மீது குண்டுகளைப் பொழிந்து தமது பயன்பாட்டை நிரூபிக்க முனைகின்றன. பல்குழல் ஏவுகணைகள், தமிழ்மக்களின் இருப்பை உலுக்கி உயிரைப் பறிக்கின்ற குறியுடன் குண்டுகளை உமிழ்ந்து தள்ளுகின்றன. சந்திரிகா அரசின் சமாதான நாடகம் கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்க, தமிழர் பூமியில் பயங்கரவாதத்தின் கொடூரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பில், அருணாசலம் சந்திரமோகன் என்ற 21வயது குடும்பஸ்தர் கொல்லப்பட்டு தலைதுண்டிக்கப் பட்டிருக்கின்றார். அதேநாள் வின்சன் ஞானதாஸ் என்ற சீவல்தொழிலாளி போகவிட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். கைகளை உயர்த்தி தம்மைச் சுடவேண்டாம் என்று, கேட்டுக்கொண்ட மாணவன் விஜயதர்சன் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கின்றார். மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற பலர் சிங்களப்படையால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருக்கின்றனர். விறகு சேகரிக்க உழவு இயந்திரத்தில் சென்ற நால்வர், உழவு இயந்திரத்துடன் காணாமல் போயுள்ளனர். சிங்களப்படையால் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப் பட்டிருக்கும் தமிழர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்லுகின்றது.

யாழ் குடாநாட்டிலோ, விமானப்படை விமானங்களின் குண்டுவீச்சுக்களும், எறிகணை வீச்சுக்களும் அதிகரித்திருக்கின்றன. தமிழ்மக்கள் மத்தியில் உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்திவருகின்றன. கைதடியில் 70வயது முதியவர் வல்லிபுரம் தியாகராசா குண்டு வீச்சுக்குப் பலி. நாயன்மார்கட்டில் ஆறு சிறுவர்கள் காயம். இப்படியாக விரிந்து செல்கின்றன சிங்களப்படையின் தாக்குதல்களின் அவலம்.

கடந்த சில வாரங்களில் தமிழ்மக்கள் மீது சிங்களப்படையினர் திணித்த கொடுமைகளில் சிலவே மேற்கூறப்பட்டவை. கைதுகளும் விசாரணைகளும் சிறை வைப்புக்களும் தொடரறாது தொடர்கின்றது.

சிறீலங்காவின் புதிய இராணுவத் தளபதியின் போர்ப்பிரகடனமும், வாங்கிக்குவித்த பெருந்தொகை நவீன போர் ஆயுதங்களின் மீதான நம்பிக்கையும், சந்திரிகா அரசு பெரும் மனப்போராட்டத்துடன் எதிர்கொள்ளும் பொதுத் தேர்தலின் வெற்றிக்கு, சிங்களப்பேரினவாதிகளைக் கவரவேண்டிய தேவையும், இன அழிப்பு நடவடிக்கை ஒன்றுக்கான அறிகுறிகளைப் படம்போடுகின்றன. ■

சிங்களத்தின் தேர்தல்

## போராடத் தயாராகும் தமிழ்க்குழுக்கள்.. கட்சிகள்

சிறீலங்காவின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒக்டோபர் பத்தாம் திகதி தேர்தல். உரிய காலத்திற்கு ஒரு மாதம் முன்னதாகவே தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதால், காலநெருக்கடியை உணர்ந்து சிங்களக்கட்சிகள் பரபரப்பான அரசியல் செயல்பாடுகளில் இறங்கியுள்ளன. சந்திரிகா வழங்கிய வாக்குறுதியான வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகசபையின் முதல்வர் பதவிகுறித்த, இனிய நினைவுகளில் மூழ்கியிருந்த டக்ளஸ் தேவானந்தாவின் குழு உட்பட, தமிழ்க்குழுக்கள் அனைத்தும் சிங்களத்து அரசியல்களத்தின் பரபரப்புகளுக்கு ஈடுகொடுத்தபடி, தேர்தல் பிரச்சார வேலைகளில் குதித்துள்ளன. யாரைப் பிடித்து எங்கே நிறுத்துவது என்ற குழப்பம். எந்தச் சிங்களக் கட்சியுடன் இணைந்து கொள்ளலாம்... எதனை ஆதரித்தால் ஆளும்கட்சியில் இடம்பிடிக்கலாம் என்ற போராட்டம். கூட்டணி அமைப்பது குறித்த பேரம் பேசல்கள். இப்படியாக தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து தமிழ்க் குழுக்கள் கடுமையாகப் போராடி வருகின்றன.

சிங்கள அரசபடையினரின் தாக்குதல்கள், அடக்குமுறை அட்டூழியங்கள், கொடுமைகளுக்கு முகம்கொடுத்தபடி, உயிர் காக்க இடம்விட்டு இடம் தேடி நகரும் பொதுமக்களைத் தேடி, வாக்கு வேட்டைக்கு தமிழ்க்குழுக்கள் புறப்பட்டுவிட்டன.

யாழ் குடாநாட்டில் மாத்திரம் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பன்னிரண்டு கட்சிகள் தேர்தலில் போட்டியிடப்போகின்றன என்பது எத்துணை அதிசயம்.

முடிவுகளைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ■

## ஓயாத அலைகள் மூன்று- கட்டம் ஐந்து

அள்ள அள்ளக் குறையாத வற்றாப் பெருநதிபோல் வீரம் விளைகின்ற பூமி. ஓயாத அலைகளால் புரிந்துபோய்க்கிடக்கின்றது. ஓயாத அலைகளின் ஒவ்வொரு அடிப்பிலும்..
அலையின் ஒவ்வொரு மடிப்பிலும் புல்லரிக்க வைக்கின்ற புலிகளின் வீரம் நிறைந்து கிடக்கின்றது. அவற்றை அள்ளி அள்ளித் தருவது எங்கள் பணி.
ஓயாத அலைகள் மூன்றின் ஐந்தாம் கட்டத்தில். குடாநாட்டின் இன்னொருபுறத்தே புலிகளின் அணிகள் நகர்ந்தது எப்படி..? சிங்களப்படையை வென்று வெற்றிகள் குவிந்ததெப்படி..?

களத்திலிருந்து பிரபுத்திரன் எழுதிய நீண்ட கட்டுரை உள்ளே.

6

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சிங்களத்துத் தேர்தலும்... தமிழ்த் துரோகங்களும்.

சிறீலங்காவின் பாராளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒக்டோபர் பத்தாம் திகதி, சிறீலங்காவின் பதினோராவது பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்கப்போவது யார் என்பதற்கான தேர்தல் நடைபெற இருக்கின்றது. இந்தத் தேர்தல், ஏதோ தமிழ்மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் தேர்தல் என்பதுபோல, அரசாங்கத் தமிழ்ப் பத்திரிகைகள் எழுதிவருகின்றன. அதாவது, சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்து, மீண்டும் சந்திரிகா ஆட்சியை மலரச் செய்தால், மீண்டும் தெரிவாகும் இந்த ஆட்சி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் என்பதுபோல பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

சிறீலங்காவின் இந்தத் தேர்தல்களில் போட்டியிட்டு வெல்வதன்மூலம், தமிழ்மக்களின் உரிமைகள் விடயத்தில் ஏதோ அரிதான காரியங்களை ஆற்றிவிடலாம் என்று கூறிக்கொண்டு, தமிழ்க்கட்சிகள், குழுக்களும் தேர்தலில் குதித்துள்ளன. முன்பு சிலதாய் இருந்த இத்தகைய குழுக்கள், இன்று பல்கிப் பெருகியுள்ளன. யாழ் குடாநாடு, வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என தமிழர்பகுதிகளில் போட்டியிடும் குழுக்கள், கட்சிகளின் எண்ணிக்கை பன்னிரண்டுக்கும் மேல் என்பது விசித்திரமாகப் படுகின்றது.

ஐந்தாண்டு காலத்திற்கு சிங்களம் வழங்கும் பாதுகாப்புடன், அதன் கொழுத்த ஊதியத்தில், சிறந்த வசதிகள் வாய்ப்புக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியுடன் வாழ்க்கை நடத்துவதைத் தவிர, இந்தத் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களின் எதிர்பார்ப்பு வேறு எதுவாகவும் இருக்க நியாயமில்லை.

தமிழ்மக்களின் ஏகோபித்த அபிமானத்தை, ஆதரவைப் பெற்றால்தான், அம்மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகும் உரிமையைப் பெறுவர் என்ற சனநாயக விதிகளுக்கு அமையவே, பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்வாகும் நிலை இன்று இல்லை என்பதால், இப்பதவிக்கு யாரும் ஆசைப்படலாம் என்ற நிலை உருவாகிவிட்டது. இந்திய அமைதிப்படை காலத்தில், மாகாணசபை உறுப்பினர்கள், மாகாணசபை முதல்வர் என மக்கள் விரோதிகள் மக்கள் பிரதிநிதிகளாக ஆக்கப்பட்ட நாள் தொடக்கம்... இந்த சனநாயக விரோதப் போக்கு நீடித்துவருகின்றது.

மக்களின் விருப்பு வாக்குகள்தான் பிரதிநிதிகளைத் தேர்தெடுக்கும் என்ற சனநாயக நடைமுறை புதைக்கப்பட்டு, கள்ளவாக்குகளும், பலவந்தமான வாக்களிப்புகளும் சிறீலங்காவின் புதிய சனநாயகவாதிகளைத் தேர்தெடுக்கப் போதுமானவை.

தொண்ணூறு வீதமான மக்கள் தேர்தலைப் புறக்கணித்தாலும், சில நூறு வாக்குகளை வைத்து, மக்கள் பிரதிநிதிகளைத் தேர்வுசெய்யும், சிறீலங்காவின் விசித்திரமான சனநாயக நடைமுறையில், ஈ.பி.டி.பியும், ஈ.பி.ஆர்.எல்.எப்.வும், புளட்டும்... இன்னும் இனவிரோதச் செயல்களில் ஈடுபடும் பிரகிருதிகளும் தாமும் மக்கள் பிரதிநிதிகளாக ஆகிவிடலாம் என ஆசைப்படுவது அதிசயமல்ல.

நவீனவடிவம் பெற்றுள்ள சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்கரங்களில் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்கள், நிரந்தர விடுதலைக்கான போராட்டம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கின்றனர். நீண்ட நெடிய வரலாற்றின் கசப்பான அநுபவங்களை பட்டறிந்து, புதிய விடியல் ஒன்றிற்காக, சொல்லொணாத் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து, அளப்பரிய தியாகங்களைப் புரிந்து போராடிவருகின்றனர்.

தமிழ்மக்கள் சிங்களத்தின் தேர்தல் குறித்து அக்கறைப்படவில்லை. அது குறித்து அக்கறைப்பட அவர்களுக்கு அவசியமுமில்லை.

இந்தத்தேர்தலால் பயன் எதுவுமில்லை என்பது தமிழ்மக்களுக்கு நன்கு தெரியும். எந்த ஆட்சி வந்தாலும், தமிழ்மக்களுக்கெதிரான போர் தொடரும் என்பதும், பௌத்த சிங்களமேலாதிக்கத்தின் நலன்களுக்கு ஏற்புடையதாக, அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவகையில் அவர்களால் தீர்மானிக்கப்படும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை, தமிழ்மக்கள்மீது திணிக்க முற்படுவர் என்பதும் தமிழ்மக்களுக்கு நன்கு தெரியும்.

சந்திரிகாஅரசு அண்மையில் கொண்டுவந்த அரைகுறைத்தீர்வைக்கூட எதிர்த்த பௌத்த பிக்குகளும், சிங்களப் பேரினவாதிகளும் போரைத் தீவிரப்படுத்துமாறு வலியுறுத்துகின்றனர்.

அரசியலமைப்புச்சீர்திருத்தத்தை எந்த எதிர்ப்புவரினும் நிறைவேற்றுவேன் என சபதம் செய்து பின்னர், இறுதிநேரத்தில் அதனைக் கைவிட்ட சந்திரிகா அரசின் புதிய பிரதமமந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக்கா, எதிர்காலத்தில் இப்படியானதொரு பிழையான காரியம் நடைபெறாது என, பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு உறுதிவழங்கியிருக்கின்றார். புதிதாக வரையப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் பௌத்த மகாசங்கத்தின் ஆலோசனையின்பேரில், அவர்களின் கருத்துக்களுக்கு அமையவே வரையப்படும் என்கிறார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், பௌத்த மகாசங்கத்தினருடன் பேசியே தனது கட்சி, தீர்வு முயற்சியை மேற்கொள்ளும் என்கிறார்.

மொத்தத்தில், மக்களின் ஆணையைப் பெறப் போட்டிபோடும், சனநாயகம் பேசும் இரு பிரதான சிங்களக்கட்சிகளும் பௌத்த மகாசங்கத்தின் விருப்பிற்கேற்பவே, இனப்பிரச்சினையைக் கையாளவுள்ளன என்பது தெளிவு. மகாசங்கத்தினரின் ஆணையே அவர்களைப் பொறுத்தவரை முக்கியமானது.

புதிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துவருவதுபோல், புலிகள் அழிக்கப்படவேண்டும் என்ற முழக்கம், பௌத்த சிங்களப் பேரினவாத முகாமில் இருந்து புறப்பட்ட கருத்தே. மொத்தத்தில் இன அழிப்பு யுத்தம் முதன்மை பெறும் அறிகுறிகளே காணப்படுகின்றன.

சந்திரிகா ஆட்சி மீண்டும் மலர்ந்தால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என, தமிழ்மக்களின் வாக்குகளைக் கவர பிரச்சாரம் செய்துவரும் அரசாங்கத் தமிழ்ப்பத்திரிகைகள், அரசாங்கத்தின் ஆறாண்டுச் சாதனைகளின் பட்டியலில், பல்குழல் ஏவுகணையையும் வரிசைப்படுத்திய சந்திரிகாவின் தேர்தல் பிரச்சார விளம்பரங்களையும் வெளியிடுவதுதான் விந்தை.

சிறீலங்காவின் இந்தத் தேர்தல் ஏமாற்று வித்தைக்கு, தமிழ்க்குழுக்கள் பயன்படுகின்றன. சிங்கள அரசுகளின் சனநாயக வேடத்திற்கு தமிழ்க்குழுக்கள் முண்டுகொடுத்துக்கொண்டிருக்கின்றன. தமிழர் பிரதேசங்களில் தமிழ்க்குழுக்கள் கட்சிகள் போட்டியிடுவதன்மூலம், தமிழ்மக்களுக்கு துரோகம் செய்யும் தமது நிலைப்பாடுகளில் இருந்து வழுவாமல், சிங்களப் பேரினவாதிகளின் விசுவாசிகளாக தொடர்ந்து செயற்படுவோம் என்ற முடிவில் இருக்கின்றன, என்பதே தமிழ் மக்களின் மேலான கருத்து.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை, 1977ஆம் ஆண்டு நடந்த தேர்தலையே, சனநாயக ரீதியாக தமது கருத்தை, ஆணித்தரமாக முன்வைக்க கிடைத்த வாய்ப்பாகக் கருதுகின்றனர். தமிழர்விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு ஏற்ப, தேர்தலின் பிரதான கோசமாக முன்வைக்கப்பட்ட தனித்தமிழீழத்திற்கு தமிழ்மக்கள் தமது முழுமையான ஆதரவை வழங்கினர். சரியாகச் சொல்வதானால், 1977ஆம் ஆண்டுத் தேர்தலில், தனித்தமிழீழம் அமைக்க, தமிழீழ மக்கள் சனநாயக பூர்வமாக தமது முழுமையானஆணையை வழங்கினர் என்பதே சரியானதாகும்.

இந்த மக்களின் சனநாயகபூர்வ நிலைப்பாட்டை மதிக்காது மிதிக்கும் சிங்களத்துத் தேர்தலில், நமது மக்களுக்கு என்ன அக்கறை இருக்கமுடியும்..?

**"ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பானதாக அமையும்."**

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில், கூட்டணியால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பிரதான தீர்மானம் இது. இதனை வலியுறுத்தியே மக்கள் அன்று வாக்களித்தனர்.

தமது உணர்வுகளில் ஆழப்பதித்துவிட்ட இந்தத் தீர்மானத்தை மக்கள் மறக்கவில்லை. சிங்களப்பேரினவாதத்தின் கொடுமைகளை சதா அனுபவிக்கும் மக்களால், இந்தத் தீர்மானத்திற்குப் புறம்பாக எதையும் சிந்திக்க முடியவில்லை.

இந்தத் தீர்மானத்தை வரைந்தவர்களும் சரி, தமது குழுக்களின் தலைப்புகளில் விடுதலை என்ற பதங்களை வரிந்து கொண்டவர்களும் சரி, தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மறந்துவிட்டார்கள். அல்லது மறந்துவிட்டவர்கள்போல நாடகமாடியபடி வாக்குப் பிச்சைக்கு வருகின்றார்கள். ஆனால் மக்கள் மறக்கவில்லை. ■

# யாரை ஏய்க்க இந்த ஏமாற்றுவித்தை..?

தேர்தல் காலமாதலால், சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி. எதிரும் புதிருமான இரண்டு தளங்களில் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றது. சிங்களக் கடும்போக்காளரான, சிறீலங்காவின் புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இனவெறித்தீ கிளம்ப யுத்த வெறியுடன் பிரச்சாரம் செய்து வருகின்றார். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவோ இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைக்கும் தனது அவாவை தீர்த்துவைக்க தமக்கே வாக்களியுங்கள் என்பது போன்று பிரச்சாரம் செய்கின்றார். முரண்படுகின்ற இந்தப் பிரச்சார தந்திரத்தில் முட்டாள்கள் ஆவது யாரோ..?

**"வடக்கு கிழக்கில் யுத்தம் செய்பவர்கள், பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளே. இந்தக் கிராமத்து இளைஞர் யுவதிகளை பாதுகாப்பதுடன் அவர்களை தமது வீடுகளுக்கு கொண்டு வந்து சேர்ப்பது நமது கடமை. தொடர்ந்து யுத்தபூமியாக நமது நாட்டை வைத்திருக்கமுடியாது. எனவே இதற்கு ஒரே தீர்வு வடபகுதி தீவிரவாதிகளை அழிப்பதுதான். அதற்காகவே நவீன ஆயுதங்கள் கொண்டுவரப்படுகின்றன."**

இப்படித் தெரிவிக்கின்றார் சிறீலங்காவின் பிரதமர் விக்கிரமநாயக்கா.

இதற்கு தலைகீழான தீர்வொன்றை சந்திரிகா சொல்லுகின்றார். கடந்த வாரம் மாத்தளையில் நடந்த நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய சந்திரிகா,

"இந்தக் கொடூர யுத்தத்தினால் சிங்களப் பௌத்த இளைஞர்கள்தான் பெரிதும் கொல்லப்படுகின்றார்கள், ஊனமடைகின்றனர். இந்த நாட்டின் இளம் சமுதாயத்தின் நலனைக் கருத்திற் கொண்டுதான் யுத்தத்தை அரசியல்ரீதியாகத் தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றேன்.. "

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

சிறீலங்கா சனாதிபதி நேரத்திற்கு நேரம் தனது பேச்சுக்களை மாற்றுபவர் என்று அறியப்பட்டவர். ஆதலால், அவரது பேச்சுக்களை விட்டுவிட்டு, சிங்களக் கடும்போக்காளரான சிறீலங்காவின் புதிய பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா என்ன சொல்கின்றார் என்றறிய, பல மேடைகளில் அவர் ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சிலவற்றின் தொகுப்பு இது. இக்கருத்துக்களே பொதுசன ஐக்கிய முன்னணியின் உள்ளார்ந்த நிலைப்பாடு என்பது ஐயத்திற்கிடமின்றி பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மத்தியில் முன்வைக்கப்படுகின்றது.

**"நான் சிங்கள பௌத்த கலாச்சாரத்துடன் இரண்டறக் கலந்து வளர்ந்தவன் என்பதால் மக்களின் தேவைகள் என்ன என்பதை என்னால் தெளிவாக உணரமுடியும். அண்மைக்காலமாக அரசாங்கத்திற்கும் மகாசங்கத்திற்கும் இடையில் கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்து அரசியல் இலாபம் பெற சிலர் முயற்சி செய்கின்றனர். அதற்கு நாம் இடம்வைக்கப்போவதில்லை. எதிர்காலத்தில், அரசியல் திர்வு யோசனைகள் மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கிக் கூறியதன் பின்னரே கொண்டுவரப்படும் என்று**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சர்வதேச சுயநிர்ணய மாநாடு 2000

ஐக்கியநாடுகள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜெனிவாவில் ஓகஸ்ட் மாதம் 11,12, 13 ஆம் திகதிகளில் சர்வதேச சுயநிர்ணய உரிமை மாநாட்டை முதன்முதலாக ஏற்பாடு செய்திருந்தனர். இம் மாநாட்டில் சர்வதேசரீதியாகப் பிரபல்யம் வாய்ந்த, சுயநிர்ணய உரிமையில் மிகவும் தேர்ச்சிபெற்ற வல்லுனர்கள் பலரும் சிறப்புப் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர். நீண்டகாலமாக ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருபவரும், சர்வதேச சட்டத்தரணியுமான அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி. கரன் பாக்கர், இத்தாலியைச் சேர்ந்த பேராசிரியர் எமிலியோ அஸ்றி ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.




இம்மாநாட்டில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் மக்களின் நிலைகள், சரித்திரங்கள் இதனால் ஏற்பட்ட விளைவுகள், இவர்கள் சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிவகைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

குர்திஸ், ஐரிஸ், ஸ்கொட்லாந்து, கியூபெக் மக்களின் போராட்டம், அமெரிக்காவில் ஆபிரிக்க அமெரிக்கர்களின் சிறுபான்மைப் போராட்டம், செஸ்சினியா மக்களின் விடுதலைப் போராட்டம், பாலஸ்தீனிய மக்களின் விடுதலைப் போராட்டம் என்பவற்றோடு இலங்கைத்தீவில் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையும் எடுத்துக்கூறப்பட்டு அலசி ஆராயப்பட்டன.

இம் மாநாட்டில், நெடுங்காலமாகச் சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்குச் செய்துவரும் கொடுமைகளை உலகறியச் செய்துவரும் அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் மனித உரிமை மையம் (Tamil Centre for Human Rights) விசேட அழைப்பின் பேரில் கலந்துகொண்டது. இந்நிறுவனத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு. ச.வி.கிருபாகரன் அவர்கள் 'மனித உரிமையும், சுயநிர்ணய உரிமையும்' என்ற

**-சுட்டி-**

தலைப்பில் ஓர் சிறப்பு ஆய்வுக் குறிப்பைச்சமர்ப்பித்து உரையாற்றினார். திரு. கிருபாகரன் தமதுரையில் '1977இல் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஒப்புதல், தமிழ் மக்கள் மீதான கொடூரமான மனிதஉரிமை மீறல்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து, அனைத்துலக நியாயச் சட்டங்கள், ஐ.நா சாசனங்களுக்கு அமைய தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கு என்றும் தகுதியுடையவர்கள்' என்று கூறினார்.

அடுத்து தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச இயக்குனர் செல்வி. டியற்றி மக்கொனால் உரையாற்றுகையில், அண்மைக் காலங்களில் இலங்கைதீவில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை மேற்கோள் காட்டி, தரவுகளோடு ஆணித்தரமாக உரையாற்றினார். இதன்போது அவர் கூறியதாவது 'இலங்கைத்தீவு எங்கும் நடைபெற்றுவரும் தமிழர்களுக்கு எதிரான இனஅழிப்புக்கள், ஓர் மனிதத்துவத்திற்கு எதிரான குற்றச்செயல்' எனக் கூறி சிறீலங்கா அரசின் மீதான தமது கடும் கண்டனத்தையும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, கனடா, நோர்வே ஆகிய தேசங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் நியாயமானது எனக்கூறியுள்ளார்கள். ஐ.நா. மனித உரிமை உப ஆணைக் குழுவின் சட்ட நிபுணர்கள் பலரும் இம்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் உப ஆணைக்குழுவில் ஈழத்தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்த குரல்கள்

*அரசசார்பற்ற நிறுவனங்களின் குரல்களாக அவற்றின் பிரதிநிதிகள்....*

## "சிறீலங்கா அரசு உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பாவிக்கின்றது"

**சர்வதேச நியாயசபையைச் சேர்ந்த கலாநிதி சாள்ஸ் கிறேவ்**

சிறீலங்கா அரசாங்கத்தின் தரவுகளின்படி 697,000 தமிழர்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அதிலும் பெரும்பாலானவர்கள் உள்நாட்டிலேயே 10 தொடக்கம் 15 தடவைகள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் மிகவும் கொடிய பாதகமான நிலையில் வாழுகின்றனர். கடந்த 10வருடங்களாகத் தமிழர் வாழிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட உணவு விநியோகமே சிறீலங்கா அரசால் செய்யப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்கள் விடுத்துள்ள அறிக்கையில், பட்டினியால் இருமாவட்டங்களிலும் வாழும் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பாதிப்படைந்துள்ளனர். எல்லாமாக 500000 மக்கள் போசாக்கின்மையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் தரவுகளின்படி 70 வீதமான குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. போசாக்கின்மையால் இப்பிராந்தியத்தில் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

போசாக்கின்மையால் ஏற்படும் அவலங்கள் குறிப்பாக உள்ளக இடம்பெயர்ந்

தொடர்ச்சி 10ம் பக்கம்

நான் வாக்களித்திருக்கின்றேன்."

"அன்பாலும் தயவாலும் போரை வெல்லமுடியாது. அரசாங்கம் நவீன யுத்த உபகரணங்களை கொள்வனவு செய்வது புலிகளுக்கு மல்லிகைப்பூ தூவி அழகுபார்க்கவல்ல."

"அத்துடன் போரில் வெற்றிபெற ஆயுதங்கள் மட்டும் இருந்தால் மட்டும் போதாது. படைவீரர்களின் மனஉறுதியும் உயர்ந்த தரத்தில் இருக்கவேண்டும்."

"தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி எவ்வித பிரயோசனமும் இல்லை. எனவே அவர்களுடன் யுத்தம் புரியவேண்டிய கட்டாய சூழ்நிலையே தோன்றியுள்ளது. யுத்தத்திற்குத் தீர்வு யுத்தம்தான்."

"தீவிரவாதிகளுடன் விளையாட நாம் விரும்பவில்லை. இதற்காகவே இன்னும் சில வாரங்களில் 34மில்லியன் ரூபாவிற்கு ஆயுதங்கள் கொண்டுவரப்படவுள்ளன. மேலும் 24மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்கள் வான்படைக்காக கொள்வனவு செய்யப்பட்ட உள்ளன."

"வடபகுதியில் யுத்தம் செய்ய வேண்டும் என்றபோது கைதட்டி ஆரவாரித்தீர்கள். மறுபுறத்தே விலைவாசி உயர்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள். எப்படியிருப்பினும் சில காலத்திற்கு விலைவாசி உயர்வை நீங்கள் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்."

## சட்ட வல்லுனர்களின் குரல்களாக........

### சிறீலங்காவின் தற்போதைய நிலைமைக்கு சிங்கள பௌத்தமே காரணம்!

**கலாநிதி அஸ்பஜோன் எய்டே, நோர்வே**

தற்போது இலங்கைத்தீவில் நடைபெறும் அவலங்களுக்குச் சிங்களப் பௌத்தமே காரணம். சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தினால் பெருந்தொகையான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1983இல் நடந்த தமிழர்களின் மீதான படுகொலைகளை இங்கு உப ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். சிறீலங்கா அரசின் துணையோடு சிங்கள இனவாதம் தனது படுகொலை நோக்கத்தை நிறைவேற்றுகின்றது.

### சிறீலங்கா அரசு இராணுவத்தினர் புரியும் அட்டூழியங்களுக்கு துணைபோகின்றது!

**திரு. போலே பினாரோ, பிரேசில்**

சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது தொடுத்துள்ள போரினால் பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு பின் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் சிறீலங்கா அரசு தனது படையினரை தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வன்முறையில் ஈடுபடுவதைக் கண்டிக்காது, தொடர்ந்து இராணுவத்தினரை அனுமதித்து வருகின்றது. கலாநிதி செல்வி. ராதிகா குமாரசாமியின் சிறப்பறிக்கையில் சிறீலங்கா அரசபடைகளால் பாலியல் வல்லுறவாக்கப்பட்ட தமிழ்ப் பெண்களின் தரவுகள் ஆதாரபூர்வமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கொலையாளிகளைப் பாதுகாக்கும் அரசு!

**திரு. லூவு யுவனோ, பிரான்ஸ்**

திரு. குமார் பொன்னம்பலம் கடந்த ஆண்டு என்னை இந்த மண்டபத்தில் சந்தித்துப் பேசினார். அவர் என்னிடம் தனக்குப் பல பயமுறுத்தல்கள் வந்ததாகவும். சில இனவாதப் பத்திரிகைகள் தம்மை மிரட்டுவதாகவும், தம்மைக் கைது செய்ய சிறீலங்கா அரசு எத்தனிப்பதாகவும் கூறினார். திரு. குமார் பொன்னம்பலம் அன்று கூறியது இன்று நிருபணமாகியுள்ளது. அவர் பட்டப்பகலில் ஜனவரி -5ஆம் திகதி அவருடைய காரில் வைத்தே படுகொலை செய்யப்பட்டார். இப்போது சிறீலங்காவில் அரச மன்னிப்புடனும், பாதுகாப்புடனும் கொலையாளிகள் உலாவி வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவரது படுகொலை தொடர்பாக இதுவரைக்கும் முழுமையான விசாரணை எதுவும் அரசால் நடத்தப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# களத்தில் ஒரு காட்டாறு

அன்றைய நாள், நாம் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறான களநிலைமை அது. எதிரி உசாரடைந்து, எமது நகர்வுகளையே அவதானித்துக்கொண்டிருக்க வேண்டும். நாலா புறமும் கவச வாகனங்களையும், கனரக ஆயுதங்களையும் நிலைப்படுத்திக் காத்துக் கிடந்தவரின் குகைக்குள் புகுந்த எமதணிகளை நோக்கி வாய் பிளந்தன இரும்புக் குழல்கள். எங்கும் நெருப்புமழை, அந்த அக்கினிக் குழம்புகளுக்கு மத்தியில் இருந்து ஒலித்த அந்தக் குரல் தொலைத் தொடர்புக் கருவியூடாக எல்லோர் செவி களிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. நீண்ட நெடுநேரம், அந்தத் தன்னம்பிக்கையான, உறுதியான, தெளிவான குரலை ஒலிபரப்பிக் கொண்டிருந்த தொலைத் தொடர்புச் சாதனம் அமைதியானது.

"பரி.... பரி.... பரி...."

"பரி.... பரி.... "

என அனைத்துக் கருவிகளும் அலற அந்தப் பெயருக்குரியவள், அந்தக் குரலுக்குரியவள் அடங்கிப் போனாள்.

1990 காலப்பகுதியில் பயிற்சிப் பாசறைகள் நோக்கி படையெடுத்த பெண்களில் இவளும் ஒருத்தி. எப்போதுமே அமைதியாகக் காணப்படும் இவள் எல்லோராலும் 'நல்லூர் நோனா' என்று அழைக்கப்பட்டவள். மணியடித் தால் சாப்பாட்டிற்கு முன்னின்று, வகுப்புக்குப் பின் நின்று, பயிற்சிக்கு முன்னின்று லெப்.கேணல் மாதவியால் புடம் போடப்பட்டு, பரிபாலினியாக வெளிவந்த இவள்; 1992 முற்பகுதி வரை பலாலி, பத்தமேனி, தட்டுவன் கொட்டி என பல முன்னணிக் காவலரண்களிலும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆகாய கடல் வெளிச்சமர், மின்னல் எனவும் பல சிறு சிறு சண்டைகளிலும் ஒரு போராளியாகவே தடம் பதித்தவள்.

1992 ஆரம்பகாலம், எமது இதயபூமியான மண லாற்றை எதிரியின் ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக் கும் பணியில் பெண் போராளிகளையும் ஈடுபடுத்து வதற்கென புதிய அணியொன்று உருவாக்கப் படுகின்றது. பத்தே பத்துப் போராளிகளுடனும், இருநூற்றைம்பது பயிற்சி எடுக்காத புதிய போராளி களுடனும் மணலாறு சென்ற அந்த அணி, அவர்களைப் பயிற்றுவித்தே தமது பணியைத் தொடங்கவேண்டும். பொறுப்பாகச் சென்றவருக்கு தன்னுடன் வந்த பத்துப் போராளிகளும் என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதே தெரியாது. அவர்களில் பரிபாலினியும் ஒருவர்.

இவள் அங்கே பயிற்சிக்கான துணை ஆசிரியராக நியமிக்கப்படுகின்றாள். பயிற்சிக்கான ஒழுங்குகள் செய்து, பயிற்சியும் ஆரம்பமாகி ஆறே ஆறு நாட்கள்.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து நாயாறு வரை மும்முனைகளில் முன்னேறி கரையோரப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம், தமிழர் தாயகத்தை துண்டாடுவதுடன், வடக் கிலிருந்து கிழக்கிற்கான எமது விநியோகப்பாதையைத் துண்டிப்பதற்காகவும் மூவாயிரம் சிங்களப்படைகள் 'கஜபார' கட்டம் ஆறு (ஒப்பரேசன் சிக்சர் கஜபார) என்ற பெயருடன் பெரும் எடுப்பிலான நகர்வை மேற்கொண்ட போது, வழிமறித்து நடந்த சண்டைக்குக் காவும் குழுவாகச் செல்லத் தயாராகின்றனர். எல்லோருக்குமே காடு புதிது, புதிய போராளிகள் வேறு. எவருக்குமே 'கொம்பாஸ்' தெரியாது, மூன்று நாட்களில் 'கொம்பாஸ்' பயின்று, பரிபாலினியுடனும், இன்னுமொரு போராளியுட னும் புதிய போராளிகள் களம் இறங்கினர்.

ஆறு நாட்களே பயிற்சி எடுத்த போராளிகள், காட்டு அனுபவங்களும், சண்டை அனுபவங்களும் குறைந் தவர்கள். சீனத்தயாரிப்பு டாங்கிகளும், கவச வாகனங்களும், பீரங்கிகளும், விமானங்களும், உலங்கு வானூர்திகளும், கடல் பீரங்கிப்படகுகளும் குண்டு மழை பொழிய, அந்த அடர்ந்த காடுகளுக்கூடாகவும், திறமையாகத் தமது பணிகளைச் செய்து, ஆண்டாள் என்ற ஒரு புதிய போராளியை இழந்து, அவர்களின் பணிக்குப் பரிசாகக் கிடைத்த ஐந்து ஏ.கே.யுடனும் ஒரு ஏ.கே.எல்.எம்.ஜீ உடனும் முகாம் திரும்பியது அந்த அணி. பரிபாலினியின் சந்தோசத்திற்கு அளவேயில்லை.

'பாத்தீங்களா, நாங்கள் சண்டைக்குப் போகாமல் சப்பிளைக்குப் போயே அஞ்சு ஏ.கேயும், ஒரு எல்.எம்.ஜீயும் எடுத்திட்டம்' என்று சொல்லிச் சொல்லி துள்ளித் திரிந்தாள். அன்று ஆறு நாட்களே பயிற்சி எடுத்த அந்தப் போராளிகளின் முதுகெலும்பாக நின்று செயற்பட்டவளே இவள்தான்.

எந்தவொரு இக்கட்டான நிலையிலும் சற்றேனும் பதட்டம் இருக்காது இவளிடம். அன்றிலிருந்து இன்று வரை இது அவளிடம் ஒன்றிவிட்ட ஒன்று. இந்தப் பழக்கம்தான் பொறுப்பாளர்களிடம் பரிபாலினியை இனங்காட்டியது.

இரண்டரை மாதப் பயிற்சிக்காலங்களில் துணைப் பயிற்சியாசிரியராக இருந்தது மட்டுமல்லாமல், முதல் பயிற்சியிலேயே எதிரியை எப்படிக் குறிபார்த்துச் சுடுவது என்பதைப் பயிற்றுவித்து, இடையிடையே நடக்கும் பதுங்கித் தாக்குதல்களுக்கு அவர்களுடன் சென்று மீண்டு, மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்து.. ஐந்து இராணுவத்தைத் தாக்குவது என்றாலும் அதற்கும் இவர்கள் சென்று.... எண்ணிக்கையில் அடங்காத பதுங்கித்தாக்குதல்கள்.

> 'பாதை நெடியது,
> பயணம் கொடியது,
> என்றாலும் இவர்கள் இலக்குத்
> தவறாது
> தூரம் கொஞ்சம் அதிகம்தான்,
> ஆனாலும் கைகளிற் கிட்டாத
> தொடுவானமல்ல.
> தோள்களிற் கிடப்பது சுமையல்ல
> வெளிச்சம் தரும் கருவி.
> பாதை பிசகாது,
> சூரியத்தலைவன் வழிகாட்டி.
> இடையில் இருள் வந்தாலும்...
> தளர்ச்சியில்லை
> கைகளில் வெளிச்சம் இருக்கின்றது'

"தலைவர் அடிக்கடி சொல்லுவார், 'ஆயிரம் முயல் களை ஒரு சிங்கம் வழி நடத்தலாம். ஆயிரம் சிங்கத்தை ஒரு முயல் வழிநடத்த ஏலாது' என்று. அதேமாதிரி புதிய போராளிகளைக் கொண்டு செய்யிறது என்பது, அதுவும் காட்டுச் சண்டை, சண்டைச் சூழலே பிள்ளைகளுக்குத் தெரியாது. பரிபாலினியில் இருந்த நம்பிக்கையில்தான் முழுப் பிள்ளையளையும் விடுறம்" என்றார்; மணலாற் றின் ஆரம்பகால மகளிர் பொறுப்பாளர் சீத்தா அவர்கள்.

பயிற்சிகள் முடித்து இரு அணிகளாகப் பிரிக்கப்பட்ட படையணியில் ஒரு அணி பரிபாலினியின் தலைமையில் களம் இறங்குகின்றது. நூறு பேர் கொண்ட ஒரு அணிக்குப் பொறுப்பாளராகவும், அதே நேரம் இருநூறு பேரைக் கொண்ட முழு அணிக்கும் துணைப்பொறுப் பாளராகவும், நியமிக்கப்பட்ட பரியின் நிலை தர்மசங்கடமாகிப் போனது. தான் சண்டைக்கு முதலில் போகமுடியாதே என யோசித்தவள், ஐம்பது பேர் கொண்ட அணியைப் பொறுப்பெடுத்து முதலில் நகர்ந்துவிட்டாள்.

'ஒப்பரேசன் செவன்பவர்' (ஏழு சக்திகள்)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து முல்லைத் தீவு கொக்கிளாய் பிரதான வீதியூடாகச் செம்மலை, குமுழமுனை ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கு உதவியாக செம்மலை, அளம்பில் கடல் பிரதேசங்களூடாக தரையிறக்க முனைந்த இராணுவத்தினரை, கரையோரம் நின்ற பரிபாலினியின் அணி எதிர்கொண்டது. ஒரே நேரத்தில் மூன்று கடல்கலங்கள் சரமாரியாக குண்டுகளை வீசியவாறு கரையை நோக்கி வருவதும், இவர்களின் துப்பாக்கிகள் சடசடக்க பின்வாங்குவதும் பின் வருவதும் போவதும், வருவதும் போவதுமாகத் திணறிய கலங்கள் இறுதியில் ஓடியேவிட்டன.

மணலாற்றின் வரலாற்றுச்சமர்களில் பெரும் எதிர்ச் சமரான இந்தச் சமரில், எதிரியின் கடல் வழி விநியோ கத்தைத் தடுத்து நிறுத்திய பெரும் பணியில் எமது இன்றைய தளபதியான இவளின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே இருந்தது.

அன்றொருநாள் சண்டை முடிந்து அனைத்து அணி களும் திரும்பிக்கொண்டிருந்தது. பரியைக் காண வில்லை. 'எமது எதிர்காலத் தளபதியை இழந்து விட் டோமா' என எல்லோர் மனங்களும் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது. 'பரிபாலினி வீரச்சாவாம்' என்ற செய்தியும் வந்துவிட்டது. ஆனால் மனங்கள் மட்டும் ஏற்க மறுத்தது. காயமடைந்தும், வீரச்சாவடைந்தும் வரும் ஒவ்வொருவரையும் ஓடி ஓடிப் போய்ப் பார்த்தார்கள். ஒவ்வொரு முறையும் ஏமாற்றம். மனமும் சோர்ந்து போய்க்கொண்டிருந்த அந்தக் கணத்தில் நான்கு பேர்களின் தோள்களில் ஒரு 'ஸ்ரெச்சர்' ஒரு நப்பாசை யுடன் ஓடிப்போய்ப் பார்த்தால் பரிபாலினி. சீராக மூச்சு வந்து கொண்டிருந்தது, உயிர் பிரியவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டோம். கால்கள், வயிறு, ஒரு பக்கத் தாடை எனப்பிய்ந்து தொங்கக் கட்டுப்போட்டபடி.... பல மைல்களுக்கப்பால் உள்ள கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமை நோக்கி நடையாய் நடந்து, பல இராணுவ அரண்களை தாக்கியழித்த அந்தச் சமரில் இவள் படுகாயமடைய, சிலர், 'வீரச்சாவு' எனக் கூற, சிலர் 'இல்லை'யென, 'இவ்வளவு தூரம் கொண்டு போகிறதுக் கிடையில் ஆள் முடிஞ்சிடும்' என்று 'இன்னொருவர் சொல்ல, அவள் வளர்த்த குஞ்சுகளின் தோள்களில் மூச்சுப்பேச்சற்ற நிலையில் எதுவுமே அறியாதவளாய் வந்து சேர்ந்தாள்.

காயங்கள் ஆறி, மீண்டும் கானகம் வந்தவளை எல்லோருமே கிண்டலடிப்பார்கள்; அவளின் ஆறு பற்களையும் இழந்த வாயைப்பார்த்து. இவளுக்கும் சிரிப்பு வரும். ஆனால் சிரிக்க முடியாதவளாக கைகளால் மூடி சிரமப்பட்டுச் சிரிப்பாள்.

தொடர்ந்தும் கானகம் அவளைக் களம் நோக்கி அழைத்தது. கடும் பயிற்சி, கோட்டைக்கேணிக்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையில் ரோந்துவரும் இராணுவத்தினரை மறைந்திருந்து தாக்கவேண்டும். அந்த முகாமிலிருந்து இந்த முகாமுக்குக் கைய சைத்தால் தெரியும். இரண்டு முகாம்களுக்கிடையில் உள்ள வெட்டை வெளியில் புல்லோடு புல்லாக இவர்கள் 8.30 மணிக்கு அவ்வழியால் வரும் இராணுவம் வர வில்லை. இவர்கள் திரும்பவும் வழியில்லை. இருட்டிய பின்னர்தான் அசையலாம். அதிகாலை 4.00 மணிக்கு நிலையெடுத்தவர்கள் 'குளுக்கோஸ்' பக்கற்றும், தண் ணீர் பக்கற்றும்தான் ஆளுக்கொன்று கொண்டு சென் றார்கள். அதுதான் அன்றைய சாப்பாடு. மாலை 5.00 மணி அவர்கள் காத்துக்கிடந்த இரைகள் கிடைத்தன. நல்ல சண்டை, கைப்பற்றிய ஆயுதங்களுடன் திரும்பினர்.

"மணலாற்றிலிருந்து வந்த இவ்வளவு வருடங்களா

# லெப்.கேணல் பரிபாலினி

www.tamilarangam.net






கியும், இன்றும் சகபோராளிகளிடம் பரிபாலினியின் செயற்பாடுகளை குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றால், அதற்குக் காரணம் அவரின் திறமையான செயற்பாடுகள்தான்" என்றார் முன்னாள் மணலாறு மாவட்டத் துணைத் தளபதி பாண்டியன் அவர்கள்.

அடிக்கடி பதுங்கித் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என விரிந்த களம் இதயபூமி-01 உடன் அவளுக்கு முற்றுப்பெற்றது.

'பரி அக்கா உங்களை பிள்ளைகளுக்கு வகுப்பு எடுக்கட்டாம்' என்றால் அந்த ஏரியாவுக்குள்ளேயே பரிபாலினியைக் காணமுடியாது. படிப்பதென்றால் பச்சைக்கள்ளி. அப்படிப்பட்டவள் கல்விப்பிரிவுக்கென அனுப்பப்படுகிறாள். அந்தக் காலப்பகுதியில்தான் மணலாறு மாவட்டச் சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்பு வீரச்சாவடைய பரிபாலினி அழுத அழுகை அன்றுதான் அவள் அழுததை எல்லோரும் பார்த்திருக்கின்றோம். அவரின் வித்துடலுக்குக்கூட அஞ்சலி செலுத்த இவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இன்று வரை அவளுக்கு அது அழியாத கவலை.

இவளுக்கு ஒரு அறை, ஒரு மேசை, கதிரை, அறை எப்பொழுதுமே பளிச்சென்று இருக்கும். மேசையில் ஒழுங்காக உறைகள் இட்டு அடுக்கப்பட்ட கொப்பிகள், நேரே சுவரில் நாளிதழில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட அன்பண்ணையின் படம், ஒவ்வொரு நாளும் முற்றத்தில் இருந்த மல்லிகையில் பூக்கொய்து, படத்துக்கு வைத்து அஞ்சலி செய்து, அவளை போரியலில் வளர்த்த ஆசான் அல்லவா லெப். கேணல் அன்பு.

இந்தக் காலங்களில் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும் என்று இவர்களுக்குக் கட்டளை. முகாமில் ஒரே 'கஸ்புஸ்'தான். அரைவாசித் தமிழ் அரைவாசி ஆங்கிலம்.

'சிஸ்ரர் நவணி.... வோட்டர் டாங்...' நிரப்பும்படி சைகையில் முடிப்பாள் பரி.

பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும் போது யாரும் வந்து 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால் பரி ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்து முழுசிவிட்டு, 'பிளவர் றீ வோட்டர்' மிகுதி சைகையில்.

கலை நிகழ்ச்சி என்றால் பரிக்கு சரியான விருப்பம். ஆனால் மேடையில் ஏறி எல்லோர் முன்னாலும் செய்வதென்றால் பயம், கூச்சம் இங்கேயோ செய்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம். என்ன செய்வது? அன்று மேடை ஏறிய பரி எல்லோரையுமே வாய்பிளக்க வைத்தாள். "அதிசயத்தின்மேல் அதிசயம். பரிபாலினியா இப்படி நடித்தாள்" என்று அனைவருமே ஆச்சரியப் பட்டனர். ஏனென்றால் இந்தப் பரிக்குள் இப்படியொரு கலைத்திறன் இருக்குமென்று எவருமே நம்பவில்லை.

ஒருநாள் இவர்களின் தமிழ் ஆசிரியர் எல்லோரையும் தூய தமிழில் ஆக்கம் ஒன்று எழுதும்படி கூறினார். பரியின் பெரும் முயற்சியில் சிறுகதை ஒன்று உருப்பெற்றது.

அதை இன்னொருத்தியிடம் வாசிக்கும்படி கொடுத்தாள், அவளும் இலேசுப்பட்டவள் அல்ல நடிப்பதென்றால் அவளுக்குக் கைவந்த கலை. பரியின் சிறு கதையை ஏற்ற இறக்கங்களுடன் பெரிதாக வாசிக்கத் தொடங்கினாள்.

"அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து சிறுநீர் வழிந்தது"

எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். பரிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'ஏனப்பா, ஏனப்பா என்ன எல்லோரும் சிரிக்கிறீங்கள்' என்றவளிடம் 'சிறுநீர் என்றால் என்னப்பா?' 'சிறிய நீர், சொட்டு நீர்' என விளக்கியவள் தன் பிழை விளங்கவும் எல்லோருடனும் சேர்ந்து தானும் சிரித்து.... சேர்ந்து படித்து.. போராளிகளுக்கு வகுப்பெடுத்து... புதிய போராளிகளை

> "என்ர சண்டை அனுபவங்களைக் கொண்டு துர்க்காவுக்கு உதவியா நின்று, படையணியை நன்றாகவளர்த்து, அண்ணை பிள்ளையள எப்படியெல்லாம் வளர்க்க வேணும் என்று நினைக்கிறாரோ அதற்கெல்லாம் நாங்கள் செயலுருவம் கொடுக்க வேணும்"

இணைத்து.....

வெளியில் சிறுபிள்ளைத் தனத்துடன் காணப்படும் இவளிடம் முழுமையான ஒரு ஆளுமைத்தன்மையும், தன்னம்பிக்கையும், இன்னும் இன்னும் நிறையவே செய்ய வேண்டுமென்ற வெறித்தனமும் நிறையவே இருந்தது.

இவளின் உருவத்திற்கும், செயல்பாடுகளுக்கும் எந்த ஒரு சம்மந்தமுமே இல்லை என்பது மாதிரியான ஒரு தோற்றம். இவளின் செயல்பாடுகளின் வெற்றிகளே இதற்கான சான்றுகள்.

மீண்டும் பரிபாலினியின் சண்டைக்களங்கள் விரியத்தொடங்கியது.

1996இல் புதிதாகப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளிவந்த ஒரு அணிக்குப் பொறுப்பாளராக, அரசியல்துறை மகளிரணியாக... அந்த அணி களம் இறங்குகின்றது. அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களோ எண்ணிலடங்காதவை. நீண்ட காலமாகச் சண்டைகளில் பங்குபற்றாது வெளி வேலைகளில் ஈடுபட்டிருந்த போராளிகள். இவர்களுடன் புதிய போராளிகள், இவர்கள் நல்லமுறையில் சண்டை பிடிப்பார்களா? என்ற கேள்வி ஏனைய தாக்குதல் அணிகளுக்கு எனினும் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நின்று போரிட்டது இவர்களின் அணியும்.

பரந்தன்- ஆனையிறவு மீதான தாக்குதல் ஒன்றுக்கு பல அணிகள் பயிற்சி எடுத்தது. யார் யார் எந்தப் பகுதிகளுக்கென அவ் அணிகள் பிரிக்கப்பட்டபோது, ஒரு அணிக்கு உதவி அணியாக இவர்கள் பிரிக்கப்பட்டனர். ஆனால் இவர்களின் அணியை அவர்கள் "தமக்கு வேண்டாம்" எனக்கூறிவிட்டனர். பரிபாலினி, மேஜர் நித்தியா, கப்டன் ஜெயஜோதி உட்பட அனைத்துப் போராளிகளும் இறுகிப் போயினர். "இவங்களுக்குச் செய்து காட்டுறம்" என்ற சவாலோடு களமிறங்கியவர்கள் சண்டையிட்டனர். காலையிலேயே விழுப்புண்ணடைந்த பரிபாலினி மாலை வரை களத்திலிருந்து வெளியேற மறுத்துவிட்டாள். பின்னரும் கட்டாயப்படுத்தியே வெளியேற்றப்பட்டாள்.

தொடர்ந்து 'ஜெயசிக்குறுய்' களம், முன்னர் இவர்களை மறுத்தவர்கள், சளைக்காது போரிட்ட இவர்களைக் கேட்டுப் பெறும் அளவுக்கு வளர்ச்சிகண்டு.. ஓயாத உழைப்பும், கடுமையான பயிற்சியும்... எல்லாவற்றிற்கும் அடிநாதமாய் பரிபாலினி....

ஓமந்தை இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு தாமே தடையுடைத்து, ஏனைய அணிகளுடன் தமது அணி ஒன்றுடன் பரிபாலினியும் உள்நுழைந்து, பல இராணுவக் காவலரண்களைத் தாக்கியழித்து மீண்டபோது, கப்டன் ஜெயஜோதியுடன் இன்னும் சில போராளிகள் திரும்பவில்லை. ஆனால் இவர்களைப் பாராட்டாத தளபதிகளே இல்லை. புளியங்குளத்தில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நின்று புளியங்குளத்தை 'புலிகள் புரட்சிக் குளமாக' மாற்றியதில் இவளின் பெரும் உழைப்பும் உள்ளது என்றால் மிகையாகாது.

அந்தச் சமருக்குப் பொறுப்பாக நின்ற தளபதி கேணல் தீபன் அவர்கள் கூறும்போது, " பரிபாலினியைப் பொறுத்த வரையில் குறிப்பாக நல்ல விசயங்களைப் பார்த்தனான், நல்ல ஒரு நிர்வாகி, துணிச்சலான சண்டைக்காரி, மற்றது எல்லாத்திலேயும் ஒரு ஆர்வம் உள்ளவர் இந்த மூன்றையும் நான் அவளிடம் நேரடியாகப் பார்த்தனான்" என்றார்.

"ஜெயசிக்குறுய்" களமுனையில் இருந்து எடுக்கப்பட்ட அரசியல்துறை மகளிர் அணியின் போராளிகள் ஒவ்வொருவரும் அவரவரின் முன்னைய பணிகளைத் தொடரும்படி கூறிய தலைவர், பரிபாலினியை சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவுக்குத் தெரிவு செய்கின்றார்.

சண்டையில் நிற்கும் ஒவ்வொரு போராளிகளினதும் திறமைகளையும், செயல்பாடுகளையும், நிலமைகளுக் கேற்ப முடிவெடுக்கும் தன்மைகளையும், சண்டையின் வெற்றி தோல்விகளுக்கான காரணிகளையும், பகுப்பாய்வு செய்வதுமே இதன் நோக்கமாகும். ஆரம்பகாலத்தில் பரிபாலினியின் பொறுப்பில் பெண்போராளிகளே செயல்பட்டு வந்தனர். இந்தப் பணிகளில், எள் எனும் முன் எண்ணெய்யாக நிற்பாள் பரிபாலினி. கனவிலும் நினைவிலும் "அண்ணை எங்கள நம்பி விட்டிருக்கிறார். நாங்கள் திறமையாகச் செயற்பட வேண்டும்" என்பதே அவளின் தாரகமந்திரமாக இருந்தது.

01-02-1998இல் ஆனையிறவு பரந்தன் சண்டையில் ஆரம்பமாகி 1999இல் ஆண் போராளிகளையும் இணைத்து கேணல் சொர்ணம் தலைமையில், எந்த மூலை முடுக்குகளில் நடைபெறும் சிறு சிறு தாக்குதல்கள் என்றாலும் அங்கெல்லாம் பரியும் சென்று வந்தாள். போகும்போது பாதை மாறி எதிரியின் பிரதேசங்களுக்கு முன்னால் சென்று மீண்ட சம்பவங்கள் பல.

ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்ப நடவடிக்கையின்போது சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவினரைக் கொண்டு களமிறங்கி மீட்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்கும் பணியில் மணலாற்றில் ஈடுபட்டு, மீண்டும் பகுப்பாய்வு வேலைகள் செய்து....

தொடரும் ஓயாத அலைகளின் வீச்சால் எமது களமுனைகள் விரிவடைய, விரிவடைய தற்காலிகமாக சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவிலிருந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு படையணிகளுடன் இணையுமாறு பணிக்கப்பட, இவளின் பயணம் சோதியா படையணியை நோக்கித் தொடர்ந்தது.

"என்ர சண்டை அனுபவங்களைக் கொண்டு துர்க்காவுக்கு உதவியா நின்று, படையணிய நன்றாக வளர்த்து, அண்ணை பிள்ளையள எப்படியெல்லாம் வளர்க்க வேணும் என்று நினைக்கிறாரோ அதற்கெல்லாம் நாங்கள் செயலுருவம் கொடுக்க வேணும்" என்று கூறிச் சென்றவளை முதல் சமரிலேயே நாம் இழந்துவிட்டோம்.

01.04.2000 நள்ளிரவு கடந்த விடிகாலை இயக்கச்சி இராணுவத் தளம் புகுந்து திரும்பாத தோழிகளுள் பரிபாலினியும் ஒருத்தியாக...

பரிபாலினி மணலாற்றுக் காட்டின் மரவேர்களில் காவலிருந்து, காட்டுப் பறவைகளையும் விலங்குகளையும் நேசித்து, பொதிகள் பல சுமந்து, ஆழக்கிணறுகள் வெட்டி, பலம் மிக்க பாசறைகள் அமைத்து, உரமேறிய கைகளுடன் எதிரியுடன் பொருதி, பல துறைகளிலும் வளர்த்து தலைவனின் பெரும் கனவுகளுக்கேற்ப பிரகாசிக்கத்தொடங்கிய ஒரு இளம் தளபதி.....

அடிக்கடி ரவைகளால் துளைக்கப்பட்டு, குண்டுச் சிதறல்களால் பிய்க்கப்பட்டு, இரத்தம் கொட்டி, வீரத் தழும்புகளால் நிறைந்த அவள் உடல்....

தனது சொத்தி வாயை நெளித்து, 'இஞ்சேருமப்பா, இஞ்சேருமப்பா...' என்று எம்மைச் சுரண்டும் அந்த அழகான சின்ன உருவம்....

ஓ.... அவள் ஓயவில்லை. இன்னும் எம்முன் நிழலுருவமாக உலாவிக் கொண்டிருக்கிறாள்.

**உலகமங்கை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இறங்கப்போகும் சிங்கக்கொடிக்கு

# இசைக்கப்பட்ட


அன்று யூன் 09 ஆம் திகதி மாலை நேரம், அவரிப்புலிகள் சீருடையோடு ஒரு பெரும் படையெனத் திரண்டிருந்தனர். இது போருக்குப் புறப்படும் முன்னான ஒன்றுகூடல். போருக்கான திட்டம் தலைவரால் தளபதிகளுக்கு விளங்கப்படுத்தப்பட்டு தளபதிகள் அணித்தலைவர்களுக்கு செல்லும்வழி வெல்லும்வழி போதித்து முடித்து இப்போது புறப்படும் முன் போராளிகளுக்கான இறுதி விளக்கவுரை நடந்துகொண்டிருந்தது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் ஒரு படைவிலகலுக்காக விடுதலைப் புலிகள், அரசுக்கு பகிரங்கமான அறிவித்தல் விடுத்திருந்தனர். அரசு அதற்கு உடன்படாத பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் படைகளை நாமே விலக்க வேண்டிவரும் என்றும் அறிவுறுத்தியிருந்தனர். ஆனால் அரசோ, "பலவீனப்பட்டுப்போயுள்ள புலிகள் நடாத்தும் உளவியல் போரே இந்த அறிவுறுத்தல் எனவும், சில காலநிலைக்கோளாறுகளால் இழக்கப்பட்ட பிரதேசங்களைக்கூட பிடித்தே தீருவோம். யுத்தத்தை முடித்தே தீருவோம்" என்று தன் ஆக்கிரமிப்பு திமிர்த்தனத்தையே கக்கியது. அவர்களைப் பொறுத்தவரையில் யாழ் குடாநாட்டின் புவியியல் அமைவும், அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளும், அங்கு நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்த படைவலுவும் புலிகளால் என்றும் வெல்லப்பட முடியாத சக்திகளாகவே தெரிந்தன. ஆனால், செய்ய முடியாததைச் சொல்வதோ, சொல்வதைச் செய்யாமல் விடுவதோ புலிகளின் மரபல்லவே. பிரபாகரன் தலைமையேற்ற தமிழர்படை நிலம் மீட்கத் தய்யாரானது.



இதுதான் போராளிகள் உறுதிப்பிரமாணம் எடுத்து, பிரியாத விடைகொடுத்து, பிரிந்து செல்கின்ற நேரம், இனி அவர்களின் சந்திப்பு எங்கும் நடக்கலாம், களத்தில், தளத்தில் அல்லது மருத்துவவிடுதியில் அதுவுமல்லாவிடில் துயிலுமில்லத்தில் ஆனால், வெற்றியின் பின்பே இதில் எதுவும் நடக்கும். காற்று அதிர உறுதியெடுத்தனர் புலிகள். "எமது இயக்கத்தின் மேன்மைமிகு குறிக்கோளாம், என உறுதி கூறி போருக்குப் புறப்படுவோம்" கையசைப்புகள், கட்டியணைப்புக்களோடு போராளிகள் தத்தமது பகுதிக்கட்டளைத் தளபதிகளோடு பிரிந்து செல்லத்தொடங்கினர்.

கிழக்கரியாலை யிலிருந்து ஒரு இரகசிய நகர்வின் மூலம் எதிரியின் முதலாவது முன்னணிக் காவலரண் தொடரை எம் அணிகள் கடக்கவேண்டும். அங்கிருந்து நகர்ந்து, நாவற்குழியையண்டி கண்டி வீதிக்குச் சமாந்தரமாகவிருக்கும் தொடர் காவலரண்களில் சண்டையைத் தொடக்கி, நாவற்குழியில் கண்டிவீதியை ஊடறுப்பது அவ் வணிகளுக்கு இடப்பட்டபணி. அதேநேரம் தனங்கிளப்பிலிருந்து எதிரியின் முன்னணிக் காவலரணை இரகசிய நகர்வின் மூலம் கடந்து ஊடறுப்பதற்காக அணிகள் நகர்ந்துகொண்டிருந்தன. போராளிகளின் நெஞ்சில் ஆவலும், படபடப்பும் கலந்து நிறைந்திருந்தது. யாழ் மண்ணை விட்டகன்றபோதான நினைவுகள் மனதில் மீண்டும்




சாவகச்சேரி - தன்ங்கிளப்பு வீதியை ஊடறுப்பதும் தனங்கிளப்பு - மறவன்புலவு வீதியை ஊடறுப்பதுமே மற்றைய இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட பணி. தளபதி கேணல் சொர்ணத்தின் கீழ் இயங்கும் இச்சமர்முனையின் தாக்குதலுக்கான முதல் நகர்வுகள் இவைதான். கிழக்கரியாலையும், தனங்கிளப்புமே இந்த நகர்வுகளுக்கான புலிகளின் புறப்படு தளங்களாக இருந்தன.

ஓயாத அலைகள்- 03 கட்டம் - 3இன் போது புலிகளால் மீட்கப்பட்ட தனங்கிளப்பு, கிழக்கரியாலை ஆகிய பிரதேசங்களை புலிகள் இன்றுவரை தக்கவைத்துக் கொண்டது ஒரு சாதனையே. நீரேரி கடந்து, தரைவழி விநியோகமற்று மிகச் சிறிதளவான நிலப்பரப்பினுள் நிலைகொள்ளும் முயற்சி புலிகளின் ஒரு அசாத்திய துணிச்சலே. ஆனால் புலிகள் இதைச் சாதித்தனர். எதிரியின் எந்த முறியடிப்பையும் எதிர்கொள்ளத் தயாராகவே புலிகள் காத்திருந்தனர். ஆயினும், எதிரி எமது இந்த நிலைகொள்ளலை முறியடிக்கமுடியாத கையாலாகாத்தனத்துடனேயே இருந்தான். பின்விளைவைப் புரிந்துகொள்ளத் தெரியாத எதிரி இப்போது விளைவுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிருந்தது. குடாநாட்டில் ஒரு புறப்படுதளத்தைப் பேணியதே எமது இந்த நகர்வுக்கான அடிப்படைப் பலத்தைத் தந்தது.

09ஆம் திகதி இருளில் நாவற்குழி வீதியை மீண்டும் எழுந்தன. 95ஆம் ஆண்டு எங்கள் தாய்மண் யாழ் மண்ணை சிங்களத்துப் படைகள் ஆக்கிரமித்தபோது சிங்கள தேசத்தில் அதை எப்படியெல்லாம் கொண்டாடினார்கள்! வவுனியா தடைமுகாமில் எங்கள் தமிழர்களுக்கே இனிப்புக்கொடுத்து தமிழரின் தன்மானத்தில் அறைந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அந்தச் சிங்கள இராணுவம் எங்கள் தோழர்களின் புதைகுழிகளைக் கிளறி வெற்றிவெறியாடியது. நெஞ்சு விம்மித்தணிய இந்தத் தேசத்தின் வீரர்கள் நகர்ந்துகொண்டிருந்தார்கள். வீழ்த்துவதைத் தவிர வேறெந்த இலக்கும் அவர்களிடமில்லை.

சமரின் ஒருங்கிணைப்புக் கட்டளைத்தளபதி கேணல் பானுவின் கட்டளை மையத்தினுள் அமைதி குடிகொண்டிருந்தது. முதலாவது இரகசிய நகர்வு வெற்றிகரமாக நிகழ்ந்த செய்தி கிட்டினால்தான் தாக்குதலுக்கான உத்தரவைப்பிறப்பிக்க முடியும். வேறெந்தச் செய்தியும் விரும்பத்தக்கதல்ல. மனதில் பதட்டமும், வெளியில் நிசப்பதமுமாய் அந்தச் சூழல் இருந்தது.

கிழக்கரியாலையிலிருந்த எதிரியின் முன்னரங்கக் காவலரண்களில் விழித்திருக்கும் எதிரியின் பார்வைகளைக் கடந்து, ஒரு அணி இரகசிய நகர்வின் மூலம் தொடரரணைக் கடந்துவிட்டது. மற்றைய அணி கடந்துகொண்டிருந்தது. மூன்றாவது அணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முகாரி......

கடப்பதற்குக் காத்துக் கொண்டிருந்தது. திடீரென எதிரித் துப்பாக்கிகள் முழங்கத்தொடங்கின. அப்போது நேரம் 1.30, குறித்த நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் முன்பாகவே சண்டை தொடங்கிய சத்தம் கேட்டு எமது கட்டளை நிலையங்கள் பரபரப்படைந்தன.

அணித்தலைவர்களிடமிருந்து தொலைத்தொடர்புக்கருவிகளில் வந்தசெய்தி நிகழ்ந்த துரதிஸ்டத்தை துப்பியது.

உடனடியாகத் தாக்குதலைத்தொடங்கக் கட்டளையிட்டார் சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு. இரகசிய நகர்வு மூலம் கடக்கவேண்டிய காவலரண் தொடர் ஒரு சண்டையின் மூலம் கடக்கவேண்டியதாயிற்று. அதனால் முதலாவது தடையரணைக் கடப்பதற்கு போரிடவேண்டியிருப்பது ஒருபுறமிருக்க, எதிரி, இரண்டாவது காவலரண் தொடரில் தயாராகிவிடுவான் என்பதும், அதனைக் கடப்பது இலகுவாக இருக்கப்போவதில்லை என்பதும் புதிய சிக்கலாகியது. அதைவிடச் சிக்கலானது தனங்கிளப்பு, மறவன்புலவு வீதிகளை ஊடறுக்கவேண்டிய அணி இன்னும் இறுதி நகர்விடத்திலேயே இருப்பதுதான். இவ்வணிகள் இனிமேல்த்தான் நகர்ந்து, உசாரடைந்துவிட்ட எதிரியோடு சாதகமற்ற நிலையில் சண்டையிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிருந்தது. எமது துரதிஸ்டம் எம்மை இப்படியொரு நெருக்கடிக்குள் தள்ளியது.

கிழக்கரியாலையிலிருந்து முன்னேறிய மாலதி, சாள்ஸ் அன்ரனி, இம்ரான்-பாண்டியன் படையணிகளைக்கொண்ட படைத்தொகுதியில் மாலதி படையணியின் அணியொன்று எதிரியின் அரண்களை வலம் இடமாகத் தாக்கி முன்னேற, இடையில் உருவாகிய பாதையூடாக மற்றைய அணிகள் உட்புகுந்து முன்னேறின. முன்னேறிய அணிகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி நாவற்குழிப்பகுதியிலிருந்த இரண்டாவது தொடரரணை விரைந்து தாக்கியது. எதிரியின் நிலைகளுக்குள் புகுந்து, தொடர்பைப் பிளந்து அவ் வணி வழிசமைக்க வீதியில் ஏறிக்கொண்டன ஏனைய அணிகள். நாவற்குழிப் பாலத்திற்கும், செம்மணிக்குமிடையிலான அவ் வீதியை ஊடறுத்து, வீதியின் இருபக்கமும் எதிரியின் தாக்குதலை முறியடிக்கக்கூடியவாறு நிலைகொண்டது மேஜர் ஜமுனா தலைமையிலான மாலதி படையணி. சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி கண்டிவீதியால் அரியாலை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது அதன் சிறப்புத் தளபதி லெப்.கேணல் ராஜனின் தலைமையில்.

கண்டி வீதியில் “யாழ்ப்பாணம் வரவேற்கிறது” வளைவுக் கோபுரம் தரிசனம் தந்து வரவேற்கிறது இந்த மண்ணின் புதல்வர்களை, ஆனால் வலம் இடமாக பரந்து கிடந்த அந்த செம்மணி வெளிப்பரப்பு ஏதோ இனம்புரியாத உணர்வுகளை மனதில் கிளறியது. எதிரியைத்தேடி முன்னேறும் பரபரப்பிற்குள்ளும் அந்த வெளிப்பரப்பை கண்கள் குடைந்து எதையோ அறிந்துவிடத்துடித்தன. அந்தத் துடிப்பு எம் இனத்தின் ஆழப்பதிந்த வடுக்களிலிருந்து எழுவது.

ஆக்கிரமிப்பில் நாம்பட்ட அவலங்களின் சாட்சியமாய் அந்தப்பூமி வரலாறு முழுவதும் சிங்களதேசம் எமக்கிழைத்தவை பற்றிச் சொல்லிக்கொண்டேயிருக்கும். சிங்களதேசம் தன்



**- கேணல் சொர்ணம் -**

வக்கிரத்தை, கொலைவெறியுணர்வை மூடி ஒரு ராஜபக்ஷாவுக்குள் அடக்கிவிட முயன்றபோது அவன் வாய்திறந்தான். “நித்தமும் உடல்கள், புதைப்பதற்காக அதிகாரிகளால் அனுப்பிவைக்கப்படும். சிலவேளைகளில் உயிருடனும் அனுப்பிவைக்கப்படும். கொன்றுவிட்டுத் தாக்கவும் என்ற உத்தரவுடன் பெண்களை வல்லுறவு கொண்டுவிட்டு அலங்கோல நிலையில் அனுப்பிவைப்பார்கள். தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இளங்குடும்பத்தில் பிள்ளைகளை விட்டுவிட்டு தாயையும், தந்தையையும் கூட்டிவந்து கணவனைக் கட்டிவைத்துவிட்டு மனைவியுடன் மாறி மாறி வல்லுறவு கொண்டோம், பின் தலையில் அடித்துக்கொன்றோம். பின் பார்த்துக் கொண்டிருந்த கணவனையும் கொன்று புதைத்தோம். கிருஷாந்தியை நாங்களெல்லோரும் வல்லுறவுகொண்டோம், இறந்தபின் அவளை அங்கே புதைத்தோம். கேட்கவந்த பெற்றோரையும், உற்றாரையும் சாட்சியமற்று அடித்துக்கொன்று புதைத்தோம்...” இப்படி அவன் சொன்ன பட்டியல் நீளமானது. அவன்போன்ற சிப்பாய்கள் தூக்குத்தண்டனை பெறநேர்ந்தால் அவர்கள் சொல்லப்போகும் செய்தி இன்னும் புதைந்துபோயுள்ள செம்மணிகளையே எமக்குத்தரும். “யாழ்ப்பாணம் வரவேற்கிறது” வளைவுகடந்து எம் கால்கள் நடந்தபோது சிங்களதேசம் எம் தேசத்துக்களித்த அவலங்களையும், அதன் நினைவுகளையும் சுமந்தே செல்லவேண்டியிருந்தது.

தனங்கிளப்பு-சாவகச்சேரி வீதியை ஊடறுக்கவேண்டிய அணி பரந்த வெட்டை கடந்து எதிரியின் முன்னணிக் காவலரண்களை தாக்கியழிக்கவேண்டியிருந்தது. எதிர்பாராமல் சண்டை தொடங்கிவிட்ட நிலையில் உசாரடைந்து தாக்கும் எதிரியை அண்மித்து தாக்குவது அவ் வணியால் இயலாமற்போனது. சாவகச்சேரி-மறவன்புலவு வீதியை ஊடறுக்கவேண்டிய தலைநகர் படையணி உசாரடைந்துவிட்ட எதிரியோடு ஒரு உக்கிர சண்டையைத் தொடக்கி வீதியை ஊடறுத்துக்கொண்டது. அதேநேரம் கோயிலாக்கண்டி முன்னரங்கக் காவலரண்களை உடைத்து முன்னேறவேண்டிய அணியும் உள்நுழைவது சாத்தியமற்றுப்போனது. மேற்கொண்டு இங்கு தாக்குதலிலீடுபடக்கூடிய வாய்ப்புகளற்ற சூழலில் இப்பகுதிச்சண்டை இடைநிறுத்தப்பட்டது.

அரியாலை பிரதான இராணுவத் தளத்தை சென்றடைந்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி அங்கிருந்து இராணுவத்தை முன்னேறவிடாது தடுத்துநிறுத்துவதுடன், ஒரு தாக்குதலையும் அத்தளம் மீது தொடுத்திருந்தது. மறுபுறத்தில் சாள்ஸ் அன்ரனி, இம்ரான்-பாண்டியன், மாலதி படையணிகளின் அணிகளைக்கொண்ட ஒரு படைத்தொகுதி கிழக்கரியாலையிலிருந்து செல்லும் எதிரியின் முன்னரங்கக் காவலரண்களூடாக மணியந்தோட்டம் நோக்கி முன்னேறியது. மணியந்தோட்டப்பகுதியில் எதிரிக்கும் எமக்குமான சண்டை வலுப்பெற்றது. அங்கு நடந்த ஒரு நீண்ட சண்டையின் பின் மணியந்தோட்டத்தில் எதிரி தோற்கடிக்கப்பட்டான். அங்கிருந்து கொழும்புத்துறை இறங்குதுறை நோக்கி இப்படைத்தொகுதி முன்னேறிக்கொண்டிருந்தது.

இத்தகைய நகர்வின் மூலம் அரியாலை பிரதான தளத்தை நாம் பக்கவாட்டாக சுற்றிவளைத்துக்கொண்டிருந்தோம். அதே நேரம் அரியாலை பிரதான தள இராணுவத்தை நாவற்குழி நோக்கி முன்னேறவிடாததுடன், அதன் கவனத்தையீர்த்தும் தளம் மீது தொடர்ந்து தாக்குதலிலீடுபட்டது சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி. அன்று மாலை 3.00 மணியளவில் கொழும்புத்துறை இறங்குதுறையைச் சென்றடைந்த படைத்தொகுதி கடுமையான சண்டையிலீடுபட, அரியாலை பிரதானதளத்தில், எதிரி தான் பக்கவாட்டாக சுற்றி வளைக்கப்படுவதையுணர்ந்து நிலைதடுமாறினான். கொழும்புத்துறை இறங்குதுறையை கைப்பற்றுவதற்காக எதிரியும், நாங்களும் கடுமையாக மோதிக்கொண்டோம். இறுதியில் தளம் எம் கையில் வீழ்ந்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்பொழுது கிட்டு பீரங்கிப் படையணியின் வலுவான சூட்டாதரவுடன் அரியாலைப் பிரதான தளத்தை தாக்கியழிப்பதற்கான சண்டையைத் தொடக்கிய புலிகள், தளத்தின் உட்புகுந்தனர். எதிரி தளத்தைக் கைவிட்டு பின்வாங்கி ஓடத்தொடங்கினான். அதே நேரம் கொழும்புத்துறை இறங்குதுறைமுகமும் அதனைச் சூழவுள்ள பிரதேசமும் எம்மால் வெற்றிகொள்ளப்பட்டது. அன்றைய இருள் பொழுதுக்கிடையில் கொழும்புத்துறையிலிருந்து துண்டிச்சந்திவ்ரையும், அரியாலையிலிருந்து துண்டிச்சந்திவரையும் முன்னேறிய படையணிகள் தமக்குள் இணைப்பையேற்படுத்தி ஒரு பலமான தடுப்பு நிலைகளை அமைத்துக்கொண்டன. தளபதி லெப்: கேணல் லக்ஷ்மனின் தலைமையிலியங்கிக் கொண்டிருந்த அப்பகுதி நடவடிக்கைகள் அன்றுடன் இலக்கைப் பூர்த்திசெய்து கொண்டது. ஆனால் இச்சண்டையில் நாம் ஒரு சிறந்த போர் வீரனை, இளந்தளபதிய்ய இழக்கநேர்ந்தது.

லெப். கேணல் வசந், யாழ்ப்பாணம் மீதான எமது நகர்வுத் திட்டமிடலுக்கு ஆதாரமாக அமைந்தவன். ஒரு இளந்தளபதியான இவன், நேரடியாக வேவுப்பணியில் ஈடுபட்ட, எளிமையும், ஆற்றலும் கொண்ட ஒரு போர் வீரன். அவனது வேவுத் தரவுகளும், அவனது தனிப்பட்ட நம்பிக்கை மீதான ஆலோசனைகளும் இந்தச் சமருக்கான திட்டமிடலின் முக்கியகவனத்தில் எடுக்கப்பட்டது. நடவடிக்கையின்போது ஒவ்வொரு அணிகளையும் வெற்றிகரமாக எதிரிப்பிரதேசத்தில் நகர்த்திச் சென்றதும், நெருக்கடி வந்தபோதெல்லாம் மாற்றுநகர்வுகளுக்கு வழிகோலியதும் இவன்தான். ஆனால் இதைவிட அவனிற்கு பெருமை சேர்த்தது, ஓயாத அலைகள் மூன்றின் முதலுடைப்பின் வெற்றியான ஒட்டுசுட்டான் இராணுவத் தளத்தை வேவுபார்த்து திட்டமிடலுக்கு அடிகோலியதும் இவன்தான். இந்த ஆற்றல்மிக்க போர் வீரனை கொழும்புத்துறையில் நடந்த சண்டையில் நாங்கள் இழந்துபோனோம்.

நேற்றைய தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தளபதி கேணல் சொர்ணத்தின் மற்றைய பகுதிச்சமர்க்களமான தனங்கிளப்பு, கோயிலாக்கண்டித் தளங்கள் மீதான தாக்குதல் 11ஆம் திகதி மாலை 4.30ற்கு புதிய முனையில், புதிய தாக்குத்ல் உத்தியோடு தொடங்கப்பட்டது. தனங்கிளப்புத் தளத்தைப் பொறுத்தவரையில் மிகப் பலமான-நிலைகளில் உசாரடைந்துவிட்ட எதிரியை தாக்குவது மிகக் கடினமாகிவிட்டது. ஆனால், எதிரி எமது நகர்வை அதிகம் எதிர்பார்த்திருந்த தென்திசையால் முன்னேறாது, அதன் மேற்குத்திசையால் பரந்து நீண்டிருந்த வெட்டைவெளிப்பிரதேசத்தினூடாக முன்னேற வேண்டுமென சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு பணித்திருந்தார். பரந்த வெளிப்பிரதேசமென்பதால் இதனூடாக நாம் முன்னேறுவதற்கான வாய்ப்பு இல்லையென்றே எதிரி கருதினான்.

மாலை 4.30க்கு கனரக ஆயுதங்களின் சூட்டுவலுவின் மூலம் முன்னணிக் காவலரண்கள் தகர்க்கப்பட, தளத்தின் உட்பகுதியில் கிட்டு பீரங்கிப்படையணி மோட்டார் பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ள, எதிரியின் தளம்பாய்ந்தது லெப்.கேணல் குட்டி தலைமையிலான இம்ரான்-பாண்டியன் படையணி. எதிரி எதிர்பாராத பகற்பொழுதில், எதிர்பாராத திசையில், கனரக ஆயுதங்களின் சூட்டுவலுவுடன் நாம் தளம் புகுந்துவிட்டது எதிரியை திகைப்புக்குள்ளாக்கியது. எதிரி தாக்குப்பிடிக்க எண்ணவில்லை. தனங்கிளப்பிலிருந்து சாவகச்சேரி நோக்கி பின்வாங்கி ஓடத்தொடங்கினான். தளத்தில் இராணுவத்தின் உடல்கள் அங்குமிங்குமாகக் கிடந்தன. அவன் ஓடிய திசையில் பின்தொடர்ந்து தாக்கின எமதணிகள். அந்த வீதிநெடுகிலும் எதிரியின் பல உடல்கள் வீழ்ந்தன.



தனங்கிளப்புத் தளம்மீதான தாக்குதல் நடாத்தும் அதேவேளை கோயிலாக்கண்டித் தளம் மீதும் தாக்குதலைத் தொடங்கியது லெப்.கேணல் சுசீலனின் தலைமையிலான தலைநகர் படையணி. எதிரியின் முன்னரங்கக் காவலரண்களில் சண்டையைத் தொடங்கிய அதேநேரம், நீரேரிப்பகுதியிலமைந்த காவலரண்கள் மீது கடற்புலிகளின் படகுகள் நெருங்கித்தாக்கின. மறவன்புலவுக்கும் தனங்கிளப்பிற்குமான வீதியில், ஊடறுத்து எமதணிகள் நிற்பதும்கூட எதிரிக்குத் தெரிந்திருந்தது. மொத்தத்தில் எதிரி சூழப்பட்டு தாக்கப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கான உதவிகள் கிடைப்பதும் வாய்ப்பற்றிருந்தது. தளத்தின் உட்பகுதியில் எமது பீரங்கித் தாக்குதல் எதிரியை திணறடித்தது, எதிரி நிலைதளம்பி பின்வாங்கவேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டான். காவலரண்களைக் கைப்பற்றி எமது அ்ணிகள் உள்நுழைய, அதேநேரம் கடற்புலிகளின் அணியொன்றும் தரையிறங்கியது. எதிரி முழுமையாக தன் தளத்தைக் கைவிட்டு ஓடத்தொடங்கினான்.

அடுத்து நகர்ந்த மூன்று நாட்கள் எந்த நட்வடிக்கையிலும் எம்மால் ஈடுபட முடியவில்லை.




ஏனெனில் எமது நடவடிக்கைப் பிரதேசம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளாக இருந்தன. எனவே, அதற்கான மாற்றொழுங்குகள் செய்யப்படும்வரை நாம் காத்திருக்கவேண்டியிருந்தது. அணிகளை மீளொழுங்குபடுத்துவதிலும், வேவு நடவடிக்கையில் ஈடுபட்டு அடுத்த தாக்குதலுக்கான முனைகளை உறுதிப்படுத்திக்கொள்வதிலுமாக அந்த நாட்கள் கழிந்தன. கைதடி, நுணாவில், மட்டுவில், சாவகச்சேரி மக்களை தற்காலிகமாக தம் வசிப்பிடங்களை மாற்றியிருக்குமாறு புலிகளின் குரலில் தொடர்ச்சியாக அறிவித்தல் விடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. மக்களின் உயிரிழப்புக்களை தவிர்க்க வேண்டுமென்பது தலைவரின் கண்டிப்பான கட்டளையாக இருந்தது. ஆனால் எதிரியோ, மக்களை நகரவிடாது மக்களை கேடயமாக்கினான். நகரும் மக்களைத் தாக்கினான். ஊரடங்குச்சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. ஆனாலும் ஒவ்வொருநாளும் கிடைக்கும் ஓரிருமணித்தியால ஊரடங்குச்சட்ட தளர்த்தலில் மக்கள் இராணுவத்தின் கட்டுமீறி வெளியேறத் தொடங்கினர். மூன்று நாட்கள் வரை இதற்காகப் புலிகள் தாக்குதல் எதுவுமின்றி காத்திருந்தனர்.

15ஆம் திகதி மாலை 4.30ற்கு தளபதி கேணல் தீபன் புதிய பகுதியில் மற்றொரு சமர்முனையைப் பொறுப்பேற்றார். தலைநகர் படையணி, சோதியா படையணி, 4.1 படையணிகளைக் கொண்ட தளபதி லெப்.கேணல் சேகரின் தலைமையில் தச்சன்தோப்புக் கிராமத்தை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த எதிரியின் காவலரண்கள் மீதான தாக்குதலுடன் தொடங்கியது அப்புதிய சமர்முனை. வலம் இடமாக இரு அணிகளாகப் பிரிந்து, எதிரியின் காவலரண்களைத் தகர்த்து முன்னேறிக்கொண்டிருந்த அணிகள், நாவற்குழி வீதியை அண்மித்தும் மற்றைய பகுதியில் கைதடி வீதியை அண்மித்தும் காவலரண்களை வெற்றிகொண்டு முன்னேறிய பின் கிராமத்தினுள்ளிறங்கிய அணிகள் மறுநாள் அதிகாலையின் முன் அக்கிராமத்தை மீட்டெடுத்துக்கொண்டன.

தச்சன்தோப்பை மீட்டெடுத்த அன்றுமாலை, கைதடி-நுணாவில் பாலத்தை அண்மித்த எமது படையணிகள், பாலத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக மீண்டும் சண்டையைத் தொடக்கின. எதிரியோ வலுப்படுத்தப்பட்ட நிலைகளிலிருந்து தாக்கத்தொடங்கினான். அதைவிட, அப்பகுதியின் நில அமைவு எமக்கு எவ்விதத்திலும் சாதகமாக அமையவில்லை. பாலம் அமைந்திருந்த வீதி உயரத்திலிருந்தது. நாமோ பள்ளமான பிரதேசத்தில் நிற்கவேண்டியிருந்தது. முன்னேறும்போது எதிரிக்கு எம்மைச் சுட்டுவீழ்த்துவது இலகுவாக இருந்தது. நாம் கடுமையாகச் சண்டையிட்டும் எதிரியொரு பின்வாங்கலைச் செய்யவில்லை. இழப்பைத் தவிர்ப்பதற்காக அன்று அம்முயற்சியைக் கைவிடுமாறு கட்டளையிட்டார் தளபதி தீபன்.

17ஆம் திகதி காலை 6.00 மணிக்கு நாவற்குழி வீதியில் பாலத்தை நோக்கியும், நாவற்குழி புகையிரதப் பாதைப் பாலத்தை நோக்கியும், இம்ரான்-பாண்டியன் படையணியும், மாலதி படையணியும் இணைந்து முன்னேறின. தளபதி லெப் கேணல் குட்டி தலைமையில் முன்னேறிய இவ்வணிகள் பாலத்திற்காகக் கடுமையாகச் சண்டையிட்டன. பாலத்தின் பின்னால் அன்ரூஸ் கொம்பனி கட்டிடத்தினுள்ளும் எதிரி பலமாக நிலைகொண்டிருந்தான். நகரச் சண்டைகளைப் பொறுத்தவரை முக்கியத்துவம்மிக்க வீதிகளையும், பாலங்களையும் கட்டுப்படுத்துவதே சமரின் வெற்றியைத் தீர்மானிக்கும் திறவுகோலாக அமையும். எனவே எதிரி இப்பாலத்தின் மீதான தாக்குதலை எதிர்பார்த்தே அதற்கான தற்காப்புத் தாக்குதலுக்கான தளம் ஒன்றை அதனருகே அமைத்திருந்தான். இதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருதற்காக நாமும் எதிரியும் மிகக் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டோம். எதிரி டாங்கியையும், துருப்புக்காவியையும் பயன்படுத்தித் தாக்கினான். எதிரியின் நிலையில் பின்னுதைப்பற்ற பீரங்கி (R.C.L)·கூட இருந்திருந்தது. அந்த வெளிப்பிரதேசத்தில் எதிரியின் கடுமையான சூட்டுவலுவினூடாகவே நாம் முன்னேற வேண்டியிருந்தது. உண்மையில், நாம் எமது முன்னேற்றத்திற்காக கடுமையான போருக்கு முகம்கொடுக்கவேண்டியிருந்தது ஆனால், இன்றைய பொழுதிற்குள் கைதடி-கோப்பாய் பாலம்வரை எதிரியின் இராணுவத் தளங்களை வெற்றிகொண்டு கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது அவசியமான தேவையாக இருந்தது. அடுத்த சமர்முனை தொடங்கப்படுவது இதன் வெற்றியிலேயே தங்கியிருந்தது.

ஒரு நீண்ட சண்டையின் பின் காலை 10.00 மணியளவில் பாலமும் அதன் பின்னாலான இராணுவத்தளமும் எம் கைகளில் வீழ்ந்தது. பலமான கட்டிடத் தொகுதியுள்ளிருந்த எதிரிகளைக்கூட எம் போராளிகள் தம் போர்த்திறனால் வெற்றிகொண்டனர். தொடர்ந்து நாவற்குழிச் சந்தி எம் கைகளில் வீழ்ந்தபோது, தச்சன்தோப்பிலிருந்து, கேணல் தீபனின் அணியொன்று தனங்கிளப்பு வீதியால் நாவற்குழிக்கு முன்னேறி, எதிரி அப்பிரதேசத்தில் இல்லாததை உறுதிப்படுத்தி கேணல் சொர்ணத்தின் அணியுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டது.

அங்கிருந்து தளபதி குட்டி தலைமையிலான இவ்வணிகள், கைதடிடத் தளத்தைப் பக்கவாட்டாக சுற்றிவளைப்பதற்காக நாவற்குழிக்குப் பின்னால் உள்ள வெளிப்பிரதேசத்தினூடாக முன்னேறி, கோப்பாய்ப் பாலத்தையும் பிடித்து அவ்வீதியையும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். அதேநேரம், தளபதி சேகர் தலைமையிலான மாலதி படையணி, 4.1 படையணி ஆகியவை தச்சன்தோப்பு கிராமத்தையண்டியிருந்த தொடர் காவலரணூடாக முன்னேறி நிலையெடுத்து நாவற்குழி-கைதடி வீதியில் ஏறுவதற்கான ஒரு சண்டையைத் தொடக்கியது. அப்படைத்தொகுதி ஏறவேண்டிய இடமாக தெங்கு பனம்பொருள் கூட்டுத்தாபனக் கட்டிடத் தொகுதியும், நவீல்ட் பாடசாலை கட்டிடத்தொகுதியும் கொண்ட ஒரு கட்டிடப்பிரதேசம் இருந்தது. ஒரு கட்டிடப்பிரதேசத்தில் எதிரி நிலைகளை வெற்றிகொள்வது சாதாரணமானதல்ல. ஆனால், அதை வெற்றிகொண்டே ஆகவேண்டிய கட்டளை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

11.00 மணிக்குத் தொடங்கிய இதற்கான சண்டை 4.00 மணிவரை உக்கிரமாக நடந்தது. மாலை 4.00 மணிக்கு அப்பகுதியை வெற்றிகொண்ட அப்படைத்தொகுதி கைதடி நோக்கி முன்னேறியது. கைதடித் தளத்தில் நிலைகொண்டிருந்த எதிரி, தாம் தாக்குதலுக்குள்ளாவதோடு கோப்பாய்ப் பாலத்தில் நாம் நிலையெடுத்திருந்ததையும் தெரிந்துகொண்டான். எதிரியால் அங்கு நிலைகொள்வது முடியாததாயிற்று. நிலைகொண்டால் அவனது தலைவிதி எங்கள் கையில். எதிரி தளத்தை கைவிட்டு பின்வாங்கி ஓடினான். தளம் எம்கைகளில் வீழ்ந்தது. நேற்று கைதடி-நுணாவில் பாலத்திற்காக முயன்று நிறுத்திவைக்கப்பட்ட சண்டை கைதடி வீதியிலிருந்து தொடங்கியது. கைதடி வீதியிலிருந்து முன்னேறிய சேகரின் அணி இப்பாலத்தைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தது. ஆயினும் அங்கிருந்து சாவகச்சேரி நோக்கி முன்னேறுவது அன்று தடைப்பட்டது. பாலத்தை அடுத்திருந்த எதிரியின் மினிமுகாம் எமது முன்னேற்றத்தை உறுதியாக தடுத்து நின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அம்மினிமுகாமை வெற்றிகொள்வதற்கு வீதியால் மட்டும் நகரக்கூடிய சூழலே அங்கு அமைந்திருந்தது. அதனை வெற்றி கொள்வதாயின் எதிரியின் கடுமையான எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியதுடன் அதன் வெற்றிக்கு குறித்த இழப்புகளையும் கொடுக்க நேரிடுவது தவிர்க்க முடியாததே, இதைத் தவிர்க்க விரும்பிய சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு அடுத்த உத்தரவுவரை அன்றைய படைநகர்வை நிறுத்துமாறு கட்டளையிட்டார்.

18ஆம் திகதி தளபதி கேணல் கருணாவுடன் புதிய அணிகளை, புதிய தாக்குதல் நகர்வுத் திட்டத்தோடு சமர்முனைக்கு அனுப்பிவைத்தார் சமரை நேரடியாக வழிநடத்தும் தலைவர் அவர்கள். தளபதி கேணல் கருணாவின் கட்டளையில் லெப்.கேணல் இனிதன் (தாத்தா) தலைமையிலான ஜெயந்தன், அன்பரசி படையணிகள் 18ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி கழித்து 12.30ற்கு கைதடி வடக்குப் பிரதேசத்திலிருந்த எதிரியின் முன்னணிக் காவலரண்கள் மீது சண்டையைத் தொடக்கின. ஒரே சமரிலேயே பகலிலும், இரவிலும் சண்டையைத் தொடக்கி, வெற்றிகொள்ளக்கூடிய போராற்றலையும், தந்திரோபாயத்தையும் நாம் கொண்டிருப்பது எதிரிக்குத் திகைப்பையும், சலிப்பையும் மூட்டியது. தாக்குதல் நேரமென்றில்லாது ஒவ்வொரு கணப்பொழுதும் எதிரி எம் வரவை எதிர்பார்க்கவேண்டியிருந்தது.

அன்றைய இருளில் தொடங்கிய சண்டையில் எதிரியின் காவலரண்களைத் துடைத்தழித்து உட்புகுந்தனர் புலிகள். ஓரணி தொடர் காவலரண்களை வெற்றிகொள்ள, மற்றைய அணிகள் அங்கிருந்து தொடர்ந்து முன்னேறி மட்டுவில்சந்தி பாடசாலைவரை சென்றடைந்தது. இப்பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த எதிரிகள் புலிகளின் வரவறிந்து தம் தளங்களுக்குத் தப்பியோடினர். முன்னேறிய ஜெயந்தன், அன்பரசி படையணிகள் மட்டுவில் பாட-சாலையடியில் மேலும் இரு அணிகளாகப் பிரிந்து கனகம்புளியடிச்சந்தியை நோக்கியும், மட்டுவிலிலிருந்து நுணாவில் சந்தியை நோக்கியும் முன்னேறின. நுணாவில் சந்தியை வந்தடைந்த அவ்வணி நாவற்குழி நோக்கி கண்டிவீதியால் முன்னேறத்தொடங்கியது. எதிரி நிலைகளைத் தாக்கியழித்தவாறு முன்னேறிவந்த அவ்வணி நேற்றைய தினம் வெல்லப்படாதிருந்த பாலத்திற்கருகாமையிலான அந்த மினிமுகாமைத் தாக்கத்தொடங்கியது. எதிரி சற்றும் இதனை எதிர்பார்க்கவில்லை. நேற்றைய எம் முயற்சி கைவிடப்பட்டது எதிரிப் படைத்தலைமைக்கு நம்பிக்கையளிப்பதாக இருந்தது. ஒருநாள் பொழுதிற்குள் எம்மால் இத்தகைய ஒரு பாரிய முன்னேற்றத்தை செய்யமுடியுமென்று அவன் நம்பியிருக்கவில்லை. ஆனால் இப்போது பெரும் பிரதேசத்தை மீட்டு பின்புறமாக எதிரியைத் தாக்கத்தொடங்கினோம். எதிரி திகைத்து அத்தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது பின்வாங்கத்தொடங்கினான். கைதடி வடக்கு ஊர்களினூடாக உயிரிருந்த எதிரிகளெல்லாம் ஓடித்தப்பினர். பாலத்தை அடுத்துநின்ற சேகரின் அணியும், முன்னேறிச்சென்ற இனிதனின் அணியும் கைகுலுக்கிக்கொண்டன.

நுணாவில் சந்தியிலிருந்து இனிதனின் அணி மீண்டும் கனகம்புளியடிச்சந்தி நோக்கிச்செல்ல அங்கிருந்து மாலதி படையணியும், 4.1 படையணியும் உள்ளிட்ட சேகர் தலைமையிலான படைத்தொகுதி சாவகச்சேரி நகரை வெற்றிகொள்வதற்காக முன்னேறியது.

இதற்கிடையில் கண்டிவீதி எமது கைகளில் விழுவதை உணர்ந்துகொண்ட எதிரியின் படைத்தலைமை உடனடியாக கனகம்புளியடியிலிருந்து புத்தூர் நோக்கிச் செல்லும் வீதியைப் பாதுகாக்க விரும்பியது. அதற்கான பாதுகாப்பு நிலைகளை அமைப்பதற்காக எதிரியின் ஒரு படைத்தொகுதி வீதியால் முன்னேறிக்கொண்டிருந்தது. இதைப் பாதுகாப்பதனூடாகவே வலிகாமத்துடனான இறுதி விநியோக வழியை எதிரி தக்கவைக்கமுடியும். ஆனால், அன்றிரவே எமது தாக்குதல் அணியொன்று அவ்வீதியில் உள்ள வண்ணாத்திப்பாலத்தையும் அப்பகுதி வீதியையும் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்திருந்தது. இதை எதிரி அறிந்திருக்கவில்லை. இப்போது முன்னேறிய இராணுவத்தைத் தாக்கத் தொடங்கியது எமது அணி. ஒரு கடுமையான சண்டையின்பின் எதிரி இறந்த தனது 19 சகாக்களின் உடல்களையும் கைவிட்டுவிட்டு பின்வாங்கிக்கொண்டான்.

அந்தக் கண்டிவீதியில் நேற்றுவரை சோதனைச்சாவடியிலிருந்து, மினிமுகாம்களிலிருந்து எம்மக்களின் உடல்களை வருடி சோதனை செய்து, தான் விரும்பிய கேள்விகள் எல்லாம்கேட்டு, அடையாளப்படுத்த ஆயிரம் அட்டைகள் கேட்டு திமிர்த்தனத்தோடு உலாவந்த எதிரிகள் எம்வரவறிந்து ஓடிக்கொண்டிருந்தனர். புலிகள்சேனை நகரை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

சாவகச்சேரி நகரை அண்மித்தபோது மாலை ஐந்து மணியிருக்கும் தபாற்கந்தோர் வீதிக்குக் குறுக்காக ஓடிய எதிரிகளும் நகரில் தளமமைத்திருந்த எதிரிகளும் தடுப்பரணமைத்து அந்த நிறைந்த கட்டிடத் தொகுதிகளை தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி எம்மை எதிர்க்கத்தொடங்கினர். எதிரி எத்தகைய எதிர்ப்பைத்தன்னும் காட்டினாலும் இலக்கை இழந்துவிட புலிகள் தயாரா? அப்பகுதியில் கடுமையான சண்டையிலிறங்கின இருதேசத்தின் படைகளும். ஒன்றரை மணித்தியாலச் சண்டையின்பின் எதிரியின் தடுப்பை உடைத்து உள்நுழைந்த புலிகள் கட்டிடங்களைக் காப்பாகப் பயன்படுத்தி வேகமாக அந்த நகர்ப்பகுதியெங்கும் நுழைந்துகொண்டனர். எதிரி எதிர்ப்புவரும் இடத்தைக்கூட சரியாகக் கணிக்கமுடியாது தடுமாறினான். தமக்குள் தொடர்பில்லாது சிதறுண்டான். உயிர்தப்பிய எதிரிகள் ஓடத்தொடங்கினர். நகர் எம்கையில் வீழ்ந்தது. அப்போது நேரம் மாலை 7.00 மணியாகியிருந்தது. அன்றைய தினம் யூன் 19.



மறுநாள் மீட்கப்பட்ட பிரதேசத்தினுள் மக்களிடமிருந்து உணவு வந்தது. நடவடிக்கையில் ஈடுபட்ட சிலநாட்களாக நீரேரி கடந்து விநியோகம் வரவேண்டியிருந்ததால் பாதுகாக்கப்படக்கூடிய உணவுக்களையே தொடர்ந்து உண்ண வேண்டியிருந்தது. அந்த உணவு தந்த சலிப்பில் எங்கள் நாக்கு திணறியபோது, ஆட்டுக்கறியுடன் வந்த சோறு அமிர்தமாய் இருந்தது. போராளிகளைக்கண்ட பூரிப்போடு தங்கள் நான்கு வருட ஆதங்கத்தை அன்றே கொட்டிவிடத்துடித்தார்கள் எம்மக்கள். தெரிந்த போராளிகளை, உறவுக்காறப் போராளிகளைக் கண்டபோது அவர்களடைந்த மகிழ்ச்சி மட்டற்றது.

ஒரு ஐயா சொன்னார், "நுணாவில் றோட்டில வழமையாய் செக்பண்ணிற ஆமி செத்துக்கிடந்தான் தம்பி. உங்கட ஆக்களிட்ட அதுக்கை துவக்கும் கிடக்கண்டு காட்டினான். அவையள், அதை எடுக்கப் பிறகு வேறயாக்கள் வருவினம் எண்டு சொல்லிப்போட்டு போட்டினம். உங்களுக்கு இப்ப உதுகள் சின்னச் சாமாங்கள்போல..." என்று கூறிக்கொண்டே சிரித்தார். அதில் ஆச்சரியமுமிருந்தது.

இன்னுமொரு வீட்டில் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்தோம். இடையில் எழுந்து உள்ளே சென்றவர் சில அட்டைகளை கையில் கொண்டுவந்து கிளித்துப்போட்டார். "நாசமாய்ப்போன காட்டெல்லாம் இண்டையோட துலைஞ்சுபோகட்டும். தம்பி என்ர அண்ணன்ரை பெட்டை எங்கட வீட்ட




வாறதெண்டால், இஞ்சத்தய கொமாண்டரிட்ட போய் அவையள் தந்த அட்டையைக்கொடுத்து பதிஞ்சுபோட்டுத்தான் வரவேணும், நல்ல விளையாட்டு, எளிய.... ..." அவர் ஆத்திரத்துடன் திட்டிக்கொண்டிருந்தார். அந்த நிலத்தை மீட்டதிலும், இனி மீட்கப்படவிருக்கும் யாழ் மண்ணிற்காகவும் எங்கள் உணர்வுகளுள் உத்வேகம் பொங்கிவழிந்தது.

23ஆம் திகதி சாவகச்சேரியிலிருந்து முன்னேறிய சோதியா, தலைநகர் படையணிகள் பெருங்குளம் சந்தியைக் கைப்பற்றியதும், எம்மால் மீட்கப்பட்ட பிரதேசத்தை தக்கவைப்பதற்கான தற்காப்பு நிலைகளை அமைப்பதில் எமது படையணிகள் அவச-ரமாக ஈடுபட்டன.

ஓயாத அலைகள் - 03 கட்டம் 5 நடவடிக்கை, யாழ் குடாநாட்டு மீட்பிற்காக புலிகள் தொடங்கவிருக்கும் பெரும் சமரிற்கான இயங்குதளத்தைப் பெற்றுக்கொள்ளும் தன் இலக்கை வெற்றி கொண்டது. கட்டம் 3 இல் கிழக்கரியாலை, தனங்கிளப்பு ஆகிய குறுநிலங்களை மீட்டு தக்கவைத்ததன் மூலம், எம்மால் இத்தகையதொரு படைநகர்த்தலை மேற்கொள்ள முடிந்தது. அடுத்து யாழ் குடாநாட்டு இராணுவத்தின் பெரும் பலம்மீது போர் தொடுப்பதற்கான இயங் குதளத்தைப் பெற்றுக்கொள்வது எமது உடனடித் தேவையாக இருந்தது. மருத்துவம், விநியோகம், சேமயிருப்பு அணிகள், ஆயுதக் களஞ்சியம், மோட்டார், ஆட்டிலறித்தளங்கள் ஆகியவற்றை உள்ளடக்கக்கூடிய ஒரு தளப்பிரதேசத்தை கைப்பற்றி, அச்சுறுத்தலற்றவகையில் தக்கவைப்பதே 30,000 தொகைகொண்ட யாழ் குடாநாட்டுப் படையினர் மீதான சமரிற்கு ஆதாரமாக அமையும். அதில் முக்கியமானது, யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள எந்த இராணுவத் தளம்மீதும் ஆட்டிலறித் தாக்குதல் நடாத்தக்கூடிய நிலப்பரப்பை மீட்பதனூடாகவே குடாநாட்டை வெற்றிகொள்ளும் பெரும் சமரிற்கான படைநகர்த்தலை எம்மால் செய்யமுடியும் என்பதே. அதற்காக தலைவரால் வரையப்பட்ட திட்டமிடலின்படி தேவையான நிலவிஸ்தீரணத்தை மீட்டெடுத்துக்கொண்டனர் புலிகள்.

ஆனால், எம்மால் மீட்கப்பட்ட பிரதேசத்தை மீளக் கைப்பற்றிவிட இருதடவை இருமுனைகளில் எதிரிப் படைத்தலைமை தன்பலத்தையும், வளத்தையும் பிரயோகித்துப் பார்த்தது.

28ஆம் திகதி அதிகாலை 5.30ற்கு கொழும்புத்துறை பகுதியூடாகவும் 09ஆம் திகதி காலை 5.50ற்கு கனகம்புளியடிப் பகுதியிலிருந்து மூன்று திசைகளிலும் எதிரி முன்னேற முயன்றான். ஆனால், இத்தகைய முன்னேற்ற முயற்சியை எதிர்பார்த்திருந்த புலிகள் அதைத் துணிகரமாக எதிர்கொண்டு மீளக் கைப்பற்றும் எதிரிப்படைத் தலைமையின் எண்ணத்திற்கு சிதைமூட்டினர். புலிகள் பற்றிய தப்பான கணிப்பீட்டினால் பெருந்தொகையான இராணுவத்தினரை எதிரி இந்த முன்னேற்ற முயற்சிகளில் பலிகொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு தங்களின் உடல்களைத் தவிர வேறொன்றும் அங்கு இருக்கவில்லை. புலிகளால் இந்நடவடிக்கையில் மீட்கப்பட்ட பிரதேசம் யாழ் குடாநாட்டுப் படையினரின் மீட்சியற்ற பொறிக்கு வியூகம் வகுத்தது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் தெற்குப் புறத்தில் வன்னியுடனான தரைத்தொடர்புடன், நாகர்கோவில்-எழுதுமட்டுவாள் இணைந்த பகுதியில் எமது நிலைகள் அமைந்திருந்த நிலையில், இந்த நடவடிக்கையின் முடிவில் கொழும்புத்துறை, கைதடி, மட்டுவில், சாவ-கச்சேரியென இணைந்த ஒரு தளப்பிரதேசத்தை நாம் கைப்பற்றியதன் மூலம் பக்கவாட்டாக பலமான ஒரு புறப்படு தளத்தை அமைத்துக்கொண்டோம். அத்துடன் பலாலி, காங்கேசன்துறை ஆகிய கேந்திரமுக்கியத்துவமிக்க தளங்கள் மீதும், யாழில் எந்தப் பிரதேசம் மீதும் எறிகணைத் தாக்குதல் நடாத்தக்கூடிய எத்திசையில் முன்னேறும் எமது அணிகளுக்கும் மோட்டார், ஆட்டிலறி சூட்டாதரவை வழங்கத்தக்க தூரத்தில் எங்கள் இயங்குதளத்தைப் பேணிக்கொண்டோம். அதேநேரம் யாழ்ப்பாண இராணுவம் தன் இருப்பிற்குத் தங்கிநிற்கும் கடல்வழி விநியோகத்தின் மீது உறுதியான அச்சுறுத்தலை வழங்கக்கூடியவாறு கடல்சார் போர் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டன. சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதற் போர்வலு யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் மீதான புலிகளின் போர்வியூகம், உடைக்கப்பட முடியாத பூட்டாக இறுக்கப்பட்டு புதிய வடிவெடுத்துள்ளது இன்று. நாளைய அதன் தலைவிதியைத் தீர்மானித்துவிட, தலைவரிடமிருந்து வரும் திட்டத்திற்கும், கட்டளைக்குமாக பொறுத்திருக்கிறது போர்க்களம். பகைவன் மூச்சிழந்த காற்றில் தன் பறப்பிற்காகக் காத்திருக்கிறது புலிக்கொடி. வீரப்புலிகளின் வெற்றிப் பரணியையே இனித் தமிழர்தேசம் பாடும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



03ம் பக்கத் தொடர்ச்சி

## சிறீலங்கா அரசு உணவையும் மருந்தையும்...

தோரிடையே என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

போசாக்கின்மையால் ஏற்படும் அனீமியா போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிப்பதும் கடினமாக மாறியுள்ளது. ஏனெனில் இரத்தப்பரிசோதனை மற்றும் இரத்தப் பரிமாறல்களுக்கு ஏற்ற உபகரணங்கள் மற்றும் வேதியல் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த ஏப்பிரல் 10வரை வன்னியிலுள்ள மருத்துவமனைகளுக்கு முதல் காலாண்டுக்கான மருந்துவகைகள் சிறீலங்கா சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் வன்னியிலுள்ள எக்ஸ்றே, ஆய்வுகூடச் செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்து போயுள்ளன. கடந்த ஆண்டில் வன்னி மருத்துவமனைகளில் நிலவிய மருந்துப் பற்றாக்குறையில் 30 வீதமானதே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

20,ஏப்பிரல் 2000 அன்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சனால் 45 வகையான மருந்துவகைகள் அனுமதிக்கப்பட்டன. ஆனால் வவுனியா தடைமுகாமிலுள்ள அரசபடைகளால் 31 வகையான மருந்துவகைகள் தடுக்கப்பட்டு வன்னிப்பகுதிக்கு 14 வகையான மருந்துவகைகளே அனுமதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 7ஆம் திகதியிலிருந்து சிறீலங்கா அரசின் மோசமான மருந்துத் தடையால் வன்னியிலுள்ள சத்திரசிகிச்சைக் கூட வசதியுள்ள மருத்துவமனைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. வன்னிக்கான மருந்துவகைகளை சிறீலங்கா இராணுவம் அனுமதிக்க மறுத்துவருவது குறித்து கடும் கண்டனத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், எல்லைகள் கடந்த மருத்துவ அமைப்பும் வெளியிட்டுள்ளன.

மொத்தத்தில் சிங்கள அரசு திட்டமிட்ட வகையில் சாதாரணகுடிமக்கள் மீது உணவுத் தடையை திணித்து வருகின்றது. அதாவது பல்வேறு சர்வதேச சட்ட வல்லுனர்கள் கூறுவதுபோல சிறீலங்கா அரசு உணவையும் மருந்தையும் தமிழர்களுக்கு எதிராக அது தொடுத்துள்ள போரில் ஆயுதமாகப் பாவிக்கின்றது என்பதே சரியானதாகும். ■

## "அப்பாவிப் பொதுமக்களை சிறீலங்கா அரசு கேடயமாகப் பாவிக்கின்றது"

### திரு. பன்டெட்டினி போஜியோ, சர்வதேச சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு (LIDLIB)

சிறீலங்காவில் யுத்தம் நடக்கும் இடங்களில் வாழும் தமிழ்மக்களின் நலன்களில் நாங்கள் ஆழ்ந்த கவலையடைகின்றோம். வரவர நிலைமைகள் மோசமடைந்து வருகின்றமை கவனிக்கத் தக்கதாக உள்ளது. எந்தவொரு யுத்தத்திலும் மனித உரிமைகள் மீறப்படுவதை அனுமதிக்க முடியாது. சிறீலங்கா அரச படைகளின் யுத்த முனைப்புக்களால் நேரடியாக இலங்கைத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் வாழும் தமிழ் மக்கள் பாதிப்புறுகின்றனர். அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வாழும் தமிழ் மக்களை இலக்கு வைத்தே அதி உக்கிரமான தாக்குதல்கள் சிறீலங்காப் படைகள் மேற்கொள்ளுகின்றன.

இந்த அரசின் யுத்தமுனைப்பானது பெருந்தொகையான மனிதஉரிமை மீறல்களுக்கு வழிகோலுவதோடு, போரின் கருவிகளாக உணவு, மருந்து என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

யுத்தம் நடைபெறும் இடங்களில் மனிதக்கேடயங்களாக அப்பாவித் தமிழ் மக்கள் சிறீலங்கா அரசபடைகளால் பிடித்து வைக்கப்படுகின்றார்கள். தொடர்ச்சியாக இப்பகுதியில் அமுல்ப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் நாளாந்தம் தளர்த்தப்படுகின்ற 4 மணித்தியாலம்கூட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் அனுமதிப்பதில்லை. போரின் பிடியிலிருந்து தப்பிச் செல்லும் பொதுமக்களையும் சிங்கள இராணுவம் கட்டாயமாகப் பிடித்து பதுங்குகுழிகள் அமைக்கும் வேலைகளில் ஈடுபடுத்துகின்றது.

மக்கள் குடியிருப்புக்கள மீது கண்மூடித்தனமான வகையில் குண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. கடந்த யூன் 5ஆம் திகதி மன்னார் பேராயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறீலங்கா அரசபடைகளின் குண்டு வீச்சுக்களால் 500 பொதுமக்கள் மட்டுவில் மற்றும் ஏனைய தென்மராட்சிப் பகுதிகளில் கொன்றொழிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் தரவுகளின்படி யூன் 22இல் மாத்திரம் சுமார் 5000 பொதுமக்கள் யுத்த அனர்த்தங்கள் காரணமாகத் தென்மராட்சிப் பகுதியில் இருந்து பூநகரி இடைத்தங்கல் முகாமிற்கு வந்து தங்கியுள்ளனர். இவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்பாடுகள் செய்து கொடுப்பதில் யூ.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சி என்பனவற்றோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர். ■

## சிறீலங்கா அரச படைகளின் காமவக்கிரத்துக்கு பலியாகும் தமிழ்ப்பெண்கள், கேட்பாரெவருமில்லையா?

### சர்வதேச நியாயசபையின் சார்பில் செல்வி. டியற்றி மக்கொனால்

14.03.2000 அன்று வெளியிடப்பட்ட ஐ.நாவின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான விசேட வல்லுனரின் அறிக்கையின்படி, இலங்கைத்தீவில் வரையறையற்ற வகையில் சிறீலங்கா அரசபடைகளால் தமிழ் பெண்களும், சிறுமிகளும் கூட்டாகப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுப் பின் கொலை செய்யப்படுகின்றார்கள் என்றும் இது குறித்து ஆழ்ந்த கவலையையும் வருத்தத்தையும் அடைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள், இடா கமிலிற்றா என ஏராளமான பெண்கள் இவ்வாறு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு சிறீலங்கா அரச படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழர் மனித உரிமைகள் மையத்திற்குக் கிடைக்கப்பெற்ற, சிறீலங்கா அரசபடைகளால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்படும் பெண்கள் பற்றிய தரவுகளில் கடந்த நான்கு வருடத் தொகுப்பின்படி 16 நாட்களுக்கு ஒரு தமிழ்ப்பெண் சிறீலங்காப் படைகளினால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்படுகின்றார். இது கிடைக்கப்பெற்ற தரவுகளின்படியே, உண்மையான வீதம் இதனைவிட அதிகமாகும். ஒவ்வொரு இரண்டுமாதத்திற்கு ஒரு தமிழ்ப்பெண் கூட்டாக சிறீலங்கா அரசபடைகளால் பாலியல்வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு பின் கொலை செய்யப்படுகின்றாள். ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஒரு தமிழ்ச் சிறுமி சிங்களப் படைகளால் சிதைக்கப்படுகின்றாள். பெரும்பாலான பெண்கள் இதன்பின்னர் தற்கொலை செய்கின்றனர். கூட்டாக சிங்களப்படைகளால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டதன் காரணமாக இறந்து விடுகின்ற சம்வங்களும் நடக்கின்றன.

ஒவ்வொரு பாலியல்வல்லுறவுச் சம்பவமும் அதன்பின்னான கொலைகளும் குடும்பத்தில் வாழும் ஏனைய உறுப்பினர்களுக்கு பலத்த அதிர்ச்சியையும் பயங்கரமான இழப்பையும் ஏற்படுத்துகின்றது. பச்சிளம் பாலகர்கள் முன்னாலேயே அவர்களது தாயமர் சிறீலங்காச் சிப்பாய்களால் கூட்டாகப் பாலியல் வல்லுறவிற் குள்ளாக்கப்படுகின்ற கோரமும் நிகழ்ந்துள்ளது. கடந்த மே 31ஆம் திகதி 70 வயது பூமணி சரவணை என்பவர் நீர்வேலியில் வைத்து அவரது 32 வயது மகனின் முன்னாலேயே இரண்டு சிங்களச் சிப்பாய்களால் பாலியல்வல்லுறவிற் குள்ளாக்கப்பட்டார். மாறிமாறி பாலியல்துன்புறத்தலுக் குள்ளாக்கிய சிப்பாய்கள் இவரின் நகை பணம் என்பனவற்றையும் திருடிச் சென்றனர். இந்தத் தாயார் நீதி கோரி எழுதியுள்ள கடிதத்தில் எனக்கு நடந்த இந்தக் கோரச் சம்பவம், இலங்கைத்தீவில் தமிழர் சிறுமைப்படுத்தப்பட்டு வதைக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்த போதுமான சாட்சியமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். இதுவே உண்மையானதும் கூட. ■

03ம் பக்கத் தொடர்ச்சி

## சர்வதேச சுயநிர்ணய மாநாடு 2000

மாநாட்டில் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் முடிவில் ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஐ.நா சபையை சுயநிர்ணய உரிமைக்கான ஆணையாளரை நியமிக்கும்படி கோரும் அதேவேளை நாடுகளின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்பதே இத் தீர்மானமாகும்.

முதலாவது சர்வதேச சுயநிர்ணய உரிமை மாநாட்டின் மூன்றாவது நாளான 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, இம் மாநாட்டில் கலந்து கொண்ட நான்கு பிரதிநிதிகள், நீண்டகாலமாக மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் பாடுபட்டுவந்தமைக்காக விசேடமாகக் கௌரவிக்கப்பட்டார்கள். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கலாநிதி கிளே, பிரித்தானியாவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ராம்பு, இந்தியாவைச் சேர்ந்த லக்ஸ்மி ரோமி, தமிழீழத்தைச் சேர்ந்தவரும், தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளருமான திரு. ச.வி.கிருபாகரன் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர். ■

## எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்



### தமிழீழத்தின் கனிப்பொருள் கைத்தொழில்முயற்சிகளும் வாய்ப்புக்களும்

ஒரு இறைமையுள்ள நாட்டின் சுயஉற்பத்தி, நுகர்வுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வளங்களை மதிப்பிடுவதும், கண்டுபிடிக்கப்பட்ட வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி விரைவான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதும் அந்த நாட்டின் பொருளாதார உறுதிநிலையைப் பேணிக் கொள்வதற்கு அத்தியாவசியமானது ஆகும்.

தமிழீழத்தில் இனங்காணப்படும் வளங்கள் சிதைந்து போகாமலும் வேறு பிரதேசத்தவராலும் சிறீலங்காவினாலும் சுரண்டப்படாமலும் பாதுகாத்து, மீட்கப்பட்டு வரும் எமது தாயகத்தின் அபிவிருத்திக்கான திட்டமிடல்களில் மேற்கொள்ளவேண்டியது எமது கடமையாகும்.

மூலவளங்கள் நிறைந்த தமிழீழத்தின் பகுதிகளில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, மட்டக்களப்பில் அமைந்த கடதாசித் தொழிற்சாலையும் திருகோணமலை புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற்சாலைகள் அதிக அன்னியச் செலாவணியை சிறீலங்கா அரசிற்கு தேடித்தந்ததோடு ஏனைய கைத்தொழில்களுக்கு மூலப்பொருளை வழங்கும் கைத்தொழில்களாகவும் விளங்குகின்றன.


அந்தவகையில் தமிழீழத்தின் கனிப்பொருள் வளங்களில் ஒன்றான கடலோர கனிமணல் படிவு பற்றி சற்றே நோக்குவோம்.

திருகோணமலையின் புல்மோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்தின் நயினாதீவு வரைக்கும் கடலோர கனிமணல்படிவு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்கனிமணலில் இல்மனைற் (Ilmenite) 70–72 வீதமாகவும் உருத்தையில் (Rutile) 8 வீதமாகவும், சேர்கோன் (Zircon) 8–10 வீதமாகவும் மொனோசிற் (Monozit) 0.2 வீதமாகவும் கதிர்த் தொழிற்பாட்டு மொனோசிற் 6.8 வீதமாகவும் இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட கனிமப்படிவங்களைப் பல்வேறு சேர்க்கைக்கு உட்படுத்தும்போது பல்வேறு கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெறமுடிகின்றது.

தேவிகல்லு, புதுவாக்காடு, நாயாறு ஆகிய இடங்களில் பாரிய மணல்படுக்கைகள் காணப்படுகின்றன. மேற்குறித்த மூன்று இடங்களிலும் ஏழு அடி ஆழம் வரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஏறத்தாழ 71.7 இலட்சம் தொன்களைக் கொண்ட மணல்படுக்கை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புல்மோட்டையில் மேலரும்பியும் நிலத்தடியில் இருக்கும் கனிமணல் படுக்கையோடு இவற்றையும்

www.tamilarangam.net






## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.



# தேசியக்கொடி

## தேசியக்கொடி வணக்க முறை

### கொடிவணக்க நிகழ்வை ஒழுங்கு செய்பவர்களுக்கு

தேசியக்கொடியை ஏற்றுகின்ற நிகழ்வின்போது தவறுகள், தடங்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்கூட்டியே தேசியக்கொடியை கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும்.

தேசியக்கொடி தலைகீழாக அல்லாமல் நேராக இருக்கின்றதா?

தேசியக்கொடியில் கயிறு கோர்ப்பதற்கான மடிப்பு புலியின் பார்வைக்கு எதிர்ப்புறமாகத் தைக்கப்பட்டிருக்கின்றதா?

கொடி கிழியாமல், மங்காமல் ஏற்றக்கூடிய நிலையில் இருக் கின்றதா?

நிகழ்வில் ஏற்றப்பட இருக்கும் ஏனைய கொடிகளைவிட தேசியக்கொடி சிறிதாக இல்லாமல் இருக்கின்றதா?

கொடியை ஏற்றுவதற்கான கயிறு கொடிக்கம்பத்தின் உயரத்தைவிட இரு மடங்கிற்குக் குறையாமலும், உறுதியாகவும் இருக்கின்றதா?

தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பம் உறுதியாக நாட் டப்பட்டிருக்கின்றதா?

கொடிக்கம்பம் தேசியக்கொடி ஏற்றுவதற்கு வேண்டிய உய ரத்தை, உறுதியை உடையதாக இருக்கின்றதா?

என்பவற்றையெல்லாம் முன்கூட்டியே உறுதி செய்து கொண் டால் கொடியேற்ற நிகழ்வில் எதுவித தவறோ, தடங்கலோ ஏற் படாது தவிர்க்கலாம்.

தேசியக்கொடியேற்ற நிகழ்வில் ஏற்படும் தவறுகள், தடங்கல்களுக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் பொறுப்பாளரே பொறுப்பாவார்.

சேர்த்தால் பலலட்சம் தொன்களைக் கொண்ட படுக்கை இப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதை அறியக்கூடியதாக உள்ளது. அத்துடன் கொக்கிளாயிலிருந்து அரிச்சமலை வரையுள்ள பிரதேசம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்களிலும் ஏறத்தாழ 57.4 இலட்சம் தொன்களைக் கொண்ட படுக்கையொன்று இருப்பதனையும் ஆய்வுகள் காட்டுகின்றது.

1981ஆம் ஆண்டு சிறீலங்காவின் கைத்தொழிற்சபை எமது பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி திருக்கோவில் பகுதிகளிலும் 2.5 இலட்சம் தொன் அளவான கனிமணல் படுக்கை இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழீழக் கரையோரமெங்கும் மேலும் ஆய்வுகள் செய்யப்பட்டால் கனிப்பொருள் மணல் பெருமளவில் பெறக்கூடியதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட கனிமணல்களில் குறிப்பாக இல்மனைற், உருத்தலைற் என்ற இரண்டையும் சில செய்முறைக்கு உட்படுத்தும் போதும் ரைற்றேனிய ஒக்சைட் என்ற இரசாயனம் பெறப்படுகின்றது. இது பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது. குறிப்பாக பல்வேறு நிறப்பூச்சுக்களை உருவாக்குவதற்கும், வார்னிஸ், லக்குவேர் போன்றவற்றையும் உற்பத்தி செய்ய முடிகின்றது. அத்துடன் பிளாஸ்டிக் உற்பத்திக்கும் கடதாசி உற்பத்திக்குமான வடிகட்டிகள் உற்பத்தி செய்யவும் பயன்படும்.

இல்மனைற்றிலிருந்து பெறப்படும் மூலப்பொருள் விமானத்தின் இறக்கைகளையும், காற்றாடிகளையும் செய்வதற்கு பயன்படக்கூடியதாக இருப்பதால் அதிக அந்நியச்செலாவணி தமிழீழத்திற்கு கிடைக்க வாய்ப்புள்ளது.

உருத்தலைற்றிலிருந்து எடுக்கப்படும் ரைற்ரேனிய ஒக்சைட்டில்(Titanium oxides) சிறிதளவாவது இரும்புத்தாது உள்ளது. இவ் இரும்புத்தாது மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமானதாகவுள்ளது. அத்துடன் இரும்பு ஓட்டும் உலோகக் குச்சிகளைச் செய்வதற்கும் பயன்ப- டக்கூடியது.

கனிமணல் படிவுகளிலிருந்து பெறப்படும் மொனோசிற், சேர்கோன் போன்றவற்றைப் பயன்படுத்தி காஸ்மான்ரில், பவுண்டறி சான்ட், அரத்தாள், மட்பாண்டம் முதலான பொருட்கள் செய்யப்படும்.

இவ் மூலவளத்தினைச் சுரண்டுவதற்காக சிறீலங்கா அரசு பல்வேறு குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றது. ஆனால் இன்றைய தமிழீழ விடுதலைப்போரின் உக்கிரத்தால் அதனது திட்டம் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது. வளங்கள் நிறைந்த பூமியாகிய தமிழீழத்தை, பொருண்மிய உறுதிப்பாடான நாடாக்கவேண்டியது எங்களின் கைகளிலேயே உள்ளது. ■

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்




20.07.2000 அன்று நாகர்கோவில் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது எல்லைப் படைவீரர்கள் மூவர் வீரச்சாவடைந்தார்கள்.

- **எல்லைப்படை வீரவேங்கை மூர்த்தி**
  செல்லையா முருகமூர்த்தி
  முல்லைத்தீவு
  த.மு. சுதந்திரபுரம், உடையார்கட்டு
- **எல்லைப்படை வீரவேங்கை ரவிச்சந்திரன்**
  ஆறுமுகசாமி ரவிச்சந்திரன்
  அணைக்கட்டு வீதி
  உடையார்கட்டு, முல்லைத்தீவு
- **எல்லைப்படை வீரவேங்கை ஜீவகன்**
  சிவலிங்கம் சசிக்குமார்
  40 ஏக்கர்த்திட்டம், சுதந்திரபுரம்
  உடையார்கட்டு

28.07.2000 அன்று தோணிக்கல் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **வீரவேங்கை நம்பிமாறன்**
  குமாரசாமி நவீனன்
  கிளிநொச்சி

04.08.2000 விளக்குவைத்தகுளம் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் எல்லைப்படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **எல்லைப்படை வீரவேங்கை ரஜனிக்காந்த்**
  மயிலழகு ரஜனிக்காந்த்
  யாழ் மாவட்டம்

10.08.2000 அன்று மூதூர் சேனையூர் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **வீரவேங்கை மலரவன்**
  செல்வரத்தினம் சாள்ஸ் தேவமைந்தன்
  சிலாவத்தை, முல்லைத்தீவு
  த.மு. 8ஆம் வட்டாரம்,
  புதுக்குடியிருப்பு

10.08.2000 அன்று சாவகச்சேரிப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து, 13.08.2000 அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **வீரவேங்கை அபிராமி**
  குணரட்ணம் ஜெயசித்ரா
  யாழ் மாவட்டம்
  த.மு. 7ஆம் வட்டாரம்,
  புதுக்குடியிருப்பு

15.08.00 அன்று தமிழீழக் கடற்பரப்பில் கடற்பயிற்சியில் ஈடுபட்டவேளையில் ஏற்பட்ட விபத்தின்போது நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **கடற்கரும்புலி மேஜர் இசையரசி**
  செல்லச்சாமி செல்வம்
  யாழ் மாவட்டம்
- **லெப்.கேணல் பழனி / பழனிராஜ்**
  அங்கமுத்து சிவநாதன்
  கண்டி மாவட்டம்
  த.மு. 2ஆம் வட்டாரம்,
  இரணைப்பாலை,
  புதுக்குடியிருப்பு
- **மேஜர் மகிழினி அல்லது சரண்யா**
  சின்னத்தம்பி வதனா
  யாழ் மாவட்டம்
- **லெப்.தூயவள்**
  சங்கரப்பிள்ளை விஜயலட்சுமி
  முரசுமோட்டை, கிளிநொச்சி
  இல-16, மாலிகா குடியிருப்பு
  கட்டைக்காடு,
  தர்மபுரம்.

15.08.2000 அன்று பொலநறுவைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

- **லெப்.முகிலன்**
  செல்வராசா ஈஸ்வரன்
  மட்டக்களப்பு
- **லெப் கருணாகரன்**
  ராஜசுந்தரம் தேவதீபன்
  மட்டக்களப்பு

19.08.2000 அன்று திருமலை மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவரும் நாட்டுப்பற்றாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

- **வீரவேங்கை குடியரசு**
  தியாகராசா சந்திரகுமார்
  கண்டி மாவட்டம்
  த.மு. 12-கோணாவில், கிளிநொச்சி
- **நாட்டுப்பற்றாளர் கணேசன்**
  தில்லைபாக்கியம் கணேசன்
  திருமலை மாவட்டம்

20.08.2000 வன்னி-மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **வீரவேங்கை ஒளியருவி / சங்கீதா**
  பழனி சந்திரகலா
  யாழ் மாவட்டம்
  த.மு. 724, 2ஆம் யூனிற், யோகபுரம்,
  மல்லாவி

20.08.2000 அன்று கச்சாய்ப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **வீரவேங்கை பகலவன்**
  இராசலிங்கம் இன்சுதன்
  முரசுமோட்டை, கிளிநொச்சி
  த.மு. இல-221, 5ஆம் யூனிற்,
  தர்மபுரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தருணமிது! தலைதூக்கு! தாவிப்பாய்!



-நிலா தமிழின்தாசன்-

ஆதிக்க இருள்கலைந்து! அடிமைப் பூட்டு
அடியோடு தகர்ந்துடையும் ஒலியைக் கேட்டு
நீதிக்கு அரங்கமைத்து நிலம்வாழ் மக்கள்
நிம்மதிக்கு வழிசமைத்து! நெஞ்சத் துக்கம்
வீசுற்றுப் போயொழிந்து! வீதி எங்கும்
விடியல் தரும் நறுங்கானம் விளம்பி மக்கள்
வாசஞ் செய் துய்கின்ற வசந்த காலம்
வருகிறது! கவலைவிடு! விழித்துக் கொள்வாய்.

தமிழீழ மண்ணெங்கும் சொரிந்த ரத்த-
தானத்தின் ஈரத்தில் மலர்கள் பூத்து
சுமையான துயரங்கள்! தொல்லை நீங்கி
சுகமான நல்வாழ்வு செழித்து ஓங்கி
எமையெண்ணி எழுகின்ற பொறாமைத் தீயில்
எதிரிமனம் சூடுபட்டு எரிந்து சாய
தமிழீழம் மலர்கிறது தரணி மெச்ச
தலைவன் போல் தலை தூக்கி நிமிர்ந்து நிற்பாய்!

திருக்கோண மாமலையிற் புலியின்சின்னம்
சிரித்தபடி கொடியோடு அசைந்து ஆட!
செருக்கோடு தேன் நாட்டின் வாவி மீன்கள்
செந்தமிழில் நறுங்கானம் இசைந்து பாட
கருக்கொள்ளும் இலக்கியங்கள் மண்ணை மீட்ட
காவிய மாவீரர்களின் கதையைக் கூற
பொருத்தமென வையத்தார் புகழ்ந்து ஏற்றப்
புலர்கிறது தமிழீழம்! புரிந்து கொள்வாய்!

வன்னியொடு மன்னாரில் "வரட்சி" நீங்கி
வளம் பொங்கி மகிழ்ச்சியினால் மனது வீங்கி
மன்னவனாம் சங்கிலியன் ஆண்ட யாழ் மண்
வரலாற்றில் புதுப் பொலிவு பொங்கிப்பாய

கன்னல் பிழி சாறெனவே கவிதை, கானம்
கலைவடிவம் பல வளர்ந்து தெருக்கள்- தோறும்
மின்னலிட, மிகவொலிக்க, வீரம் பொங்க
மீள்கிறது தமிழீழம்! வீறு கொள்வாய்!

அடிமையென! அகதியென! அகிலந்தோறும்
அல்லலுறும் நிலையொழிந்து உரிமை பெற்று
மிடிமையறுந் தொளிபுரள மேன்மை ஓங்க!- வீறு
மிதமிஞ்சிக் கல்வியொடு செல்வம் பொங்க
குடியரசாய் மக்களெல்லாம் குலவிவாழ
கொஞ்சுதமிழ் விஞ்சியுயர் பண்பாடுய்ய
விடுதலையாம் சுகந்தத்தின் இன்பம் துய்க்கும்
வேளையிது தமிழினமே! வேங்கையாவாய்.

● ● ●

## புறப்படுவாய் தமிழா!

கோழையாய் இருப்பதென்ன
கோட்டை ஆண்ட தமிழா
வாளெடுத்து வென்றதெல்லாம்
வண்ணமான கனவா?

சோழ சேர பாண்டியர்கள்
உந்தனுக்கு உறவா?
நாளை இங்கு நம்பமாட்டார்
யாரும் இதை தமிழா!

நாளும் இங்கு இளைய உயிர்கள்
மாண்டு போதல் தகுமா ?
ஈழம்காண நீயும் இன்று
புறப்படுவாய் தமிழா!

நாளை இங்கு நிச்சயமாய்
ஈழம் வந்து கிடைக்கும்
வேழம் வென்ற வேங்கைக்கொடி
எங்கும் இங்கே பறக்கும்.

-தூயவள்-



பட்டுமெத்தையும்
பவளச் செவ்வாய் நனைய பால்ச்சோறும்
அலங்காரப் பின்னலிட்ட 'அச்சாச்' சட்டையும்
சலிக்காது விளையாட 'எலக்ரோனிக்'
பொம்மையும்...
..........
இதுவா கேட்பார்கள்... ?
ஏக்கம் பொதிய நோக்கும் விழிகள் தேடுவதெல்லாம்...
ஒதுங்க ஒரு குடிலும்...
ஒருவேளை உணவும்..!

*முடியுமா உங்களால்...?? நிட்சயம் முடியும்!!*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | **FRANCE**<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | **ITALY**<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft<br>Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்